புலவர்மணி
அல்ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன்

# உலகியல் விளக்கமும்

நம் நாட்டின்

# நாலிலக் காட்சிகளும்

அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

புலவர்மணி - அல் ஹாஜ்

ஆ. மு. ஷரிபுத்தீன்

# உலகியல்

## விளக்கமும்

நம் நாட்டின்

# நானிலக் காட்சிகளும்

அன்னை வெளியீட்டகம்

மருதமுனை

## BIBLIOGRAPHICAL DATA


TITLE OF THE BOOK:- ULAKIYAL VILLAKKAMUM NAM NATTIN NANILA KATCHIKALUM

AUTHOR:- PULAVARMANI
AL-HAJ. A. M. SHERIFUDEEN J. P.
(RETIRED C: E: O)



COPYRIGHT:- ANNAI PUBLICATIONS



FIRST EDITION:- FEBRUARY 1997

PRINTERS:- 'KLEEN PRINTERS' HORANA ROAD, ELUWILA, PANADURA.

PUBLISHERS:- ANNAI PBLICATIONS
NO. 16, SCHOOL AUENUE,
OFF STATION ROAD, DEHIWELA,
SRI LANKA.

## கலாசார சமய அலுவல்கள் அமைச்சின் முஸ்லிம் அலுவல்களுக்குப் பொறுப்பான மேலதிகச் செயலாளர்

# அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல் அவர்களின் சிறப்புரை

புலவர்மணி அல்ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்களின் இந்நூலுக்குச் சிறப்புரை எழுத ஆரம்பிக்கும் பொழுது, 1977ஆம் ஆண்டு அவர் எழுதிய கட்டுரையொன்று ஞாபகத்துக்கு வருகிறது.

அக்கால கல்முனை ஸாஹிராக் கல்லூரி வெளியிட்டு வந்த மாதாந்தப் பத்திரிகையில் அவர் எழுதிய கட்டுரையொன்றில் மாணாக்கரை விழித்துப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''முற்றத்து மல்லிகை மணப்பதில்லை என்பது பழமொழி. நமது நாட்டின் வளப்பமும், சிறப்பும் நமக்குத் தெரிவதில்லை. உலகின் சகல வளப்பங்களும் நிரம்பிய ஒரு நாடு உண்டானால் அது நமது ஈழவள நாடுதான். இதனாற் போலும் இதனை மேலை நாட்டார் 'இந்து சமுத்திரத்தின் முத்து' என வர்ணித்துள்ளனர். மேலை நாட்டாரை நம்பக்கல் ஈர்த்து அரசு பீடத்தில் அமர்த்தியது இதன் வளப்பந்தான். கடல்படு திரவியங்கள், காடுபடு திரவியங்கள், மலைபடு திரவியங்கள் எல்லாம் நிறையப் பெற்றுள்ளன.

நம் நாட்டில் வருடத்தில் பத்து அங்குலத்துக்குக் குறைவான மழையைப் பெறும் பாலைநிலம் இல்லை. ஏனைய நானிலங்களுந்தான் உண்டு. முல்லையும் குறிஞ்சியுந் திரிந்து பாலையாகும் என்பது இலக்கணமுடையர் கூற்று. ஒரே சீராக வீசிக் கொண்டிருக்கும் இரு பருவக் காற்றுக்களாலும் கிரமமாக மழையைப் பெறும் நமது நாட்டில் பாலை நிலம் ஏற்படக் காரணம் இல்லை.

இவ்விரு காற்றுக்களாலும் நிரந்தர மழையைப் பெறும் மத்திய மலை நாடு செழுமையும் கொழுமையும் மிக்கு விளங்குகிறது. மழையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சியாகும். நம் நாட்டின் குறிஞ்சி நிலக் காட்சியொன்றினை உங்களுக்குக் காண்பிக்க உங்களை அழைத்துச் செல்லப் போகிறேன். என்னுடன் வரவேண்டும்''

இவ்வாறு கூறி, குறிஞ்சிக் காட்சி பற்றிய அழகான பாடல் ஒன்றையும், அடுத்தடுத்து வந்த இதழ்களில் முல்லைக் காட்சி, மருதக் காட்சி, நெய்தற் காட்சி என்பனவற்றையும் தமது அழகுறு தமிழில் மாணவர்களுக்கு அவர் வழங்கியுள்ளார். இந்நூலைப் புரட்டிய உடயேயே இருபது வருடங்களின் பின்னர் இதே தலையங்கங்களோடு கவிதைகள் ஆரம்பிப்பதைப் பார்க்கும் பொழுது மிகவும் மகிழ்ச்சி ஏட்பட்டது.

1909 ஆம் ஆண்டு பிறந்த புலவர்மணி அவர்கள் செந்தமிழில் யாப்பமையக் கவிதை இயற்றும் வல்லமை பொருந்திய மிகச் சிலருள் தலைசிறந்தவராவார். அதனாற்றான் புலவர்மணி பெரியதம்பிப் பிள்ளை அவர்கள்

''வெண்பாவி லென்னைநீ வென்றாய் ஷரிபுத்தீன்
நண்பாவென் நாம முனக்களித்தேன்''

என வாழ்த்தித் தனது நாவாலேயே 'புலவர்மணி' என மகிழ்வுடன் அழைத்ததோடு இலங்கை அரசாங்கத்தினாலும் இலக்கிய மாமணி, நூருல்பன்னான் எனும் பட்டங்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

புலவர்மணியின் ஆயிரக்கணக்கான பாடல்களில் ஒரு சிறு துளியே இந்நூலாகும். தமது பிறந்த நாட்டைப் பற்றி அவர் கொண்டுள்ள பெருமையை இதில் உள்ள அநேக பாடல்கள் மிக அழகாக எடுத்துக் காட்டுகின்றன. அதே போன்று நாட்டு மக்களின் வாழ்வினையும், பண்பாட்டினையும் இப்பாடல்கள் நிரந்தரப் பதிவுஞ் செய்கின்றன. மருதக் காட்சி எனுந் தலையங்கத்தின் கீழ் வரும் பாடல் ஒன்றே இதனை நிரூபிக்கப் போதுமானதாகும்.

களஞ்செ துக்கி யரக்குப் புதைத்தவர் -
கடற்பு னலடம் பங்கொர்டி கர்வலாய்
களம்நி றைத்துக் கதிர்ச்சூ டெடுத்ததைக்-
கலைத்துக் குவித்துக் காரெரு மைக்கடா
களமி றக்கி வளைத்து நடத்திடக் -
சுசங்கு பொலியினைக் கர்ற்றினிற் றூற்றியே
களங்கு றித்து வருவிந் தீந்தபின் -
கணக்கெ டுத்துக் களனி பொலிவரே.

இந்நூலிலுள்ள அநேக பர்டல்கள் இவ்வுலகிலும் மறுவுலகிலும் வாழ்வர்ங்கு வர்ழ்வதற்கான வழிகளைக் கூறுகின்றன. இறுதியிலுள்ள பாடல் இதன்உச்சக்கட்டமாக அமைகிறது.

உன்னையே நம்பினே னுன்னருள் வேண்டுகிறேன்
உன்னளவி லேயென்னை யொப்புவித்தேன் - என்கருமம்
எல்லாம் பொறுப்பேற்பாய் என்னிறைவா விவ்வுலகில்
இல்லைவே றாரு மெனக்கு.

தேனருவி பாயும் திகழ்சுவனப் பொற்பதியில்
ஞானபிதா நாத ரயலினிலே - நானமர
உன்கிருபை வேண்டு முயர்ந்தோயுன் சந்நிதியென்
கண்குளிரக் காணுநெறி காட்டு.

சின்னாலிமப்பா என வழங்கப்பட்ட தனது பாட்டனார் மீராலெப்பை ஆலிமின் 'ஞானரை வென்றார்' எனும் ஏட்டுப் பிரதியைப பதிப்பித்ததோடு, தமது 'நபிமொழி நாற்பது' நூலுக்குச் சாஹித்தியப் பரிசும் பெற்ற புலவர் மணி அவர்களின் பல நூல்கள் அச்சில் வெளிவந்துள்ள போதிலும், வெளிவரக் காத்திருப்பவைகளின் தொகை அதிகம் என நினைக்கிறேன். அவையும் வெளிவந்தால் தமிழ் கூறும் நல்லுலகமும், இஸ்லாமிய இலக்கியமும் பெரும் பயனடையும்.

அல்ஹாஜ் எஸ். எச். எம். ஜெமீல்

கலாசார சமய அலுவல்கள் அமைச்சு,
செத்சிரிபாய,
பத்தரமுல்ல,
25 நவம்பர் 1996

# வெளியீட்டுரை

நீண்டகாலமாக வெளிக் கொணரப்படாமல் குவிந்து கிடக்கும் புலவர்மணி அல்-ஹாஜ் ஆ.மு. ஷரிபுத்தீன் அவர்களின் கவிதைக் கருவூலங்களை, அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் காலத்திலேயே அச்சுருவில் மாற்ற எண்ணினோம்.

அதன்பலனாக அவற்றைப் படிப்பவர்களின் நலன் கருதி சிறுசிறு நூல்களாக, வெளியிட முன்வந்தோம்.

''உலகியல் விளக்கமும் நம் நாட்டின் நானிலக் காட்சிகளும்'' முதல் தொகுதியாக வெளிவருகின்றது.

அன்னை வெளியீட்டகத்தின் ஒன்பதாவது நூல் இதுவாகும். வாசகப் பெருமக்களின் மேலான ஆதரவு எமக்குக் கிடைக்கும் என்பதில் நம்பிக்கையோடு அடுத்து ''முதுமொழி வெண்பா'' வெளிவரும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

## அன்னை வெளியீட்டக வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1 | இசைவருள் மாலையும் மக்களுக்கு இதோபதேசமும்<br>புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் | 1979 |
| 2 | பாலையில் வசந்தம் ''ஜின்னாஹ்'' | 1989 |
| 3 | முத்து நகை ''ஜின்னாஹ்''<br>(கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு பெற்றது) | 1989 |
| 4 | மஹ்ஜபீன் காவியம்<br>(புதுக்கோட்டை முதலாம் இஸ்லாமிய தமிழ்ச் சிற்றிலக்கிய மாநாட்டில் வெளியிடப்பட்டது) | 1991 |
| 5 | ஷேக்ஸ்பியர் ஒரு ஜீவநதி றோமியோ ஜூலியட்<br>பல்கலைவேந்தர் 'சில்லையூர்' செல்வராசன் | 1992 |
| 6 | சுழற்சிகள் - தாஸிம் அஹமது | 1994 |
| 7 | புனித பூமியிலே காவியம் ''ஜின்னாஹ்'' | 1995 |
| 8 | பனிமலையின் பூபாளம் ''மருதம்'' (ஜின்னாஹ்) | 1995 |
| 9 | உலகியல் விளக்கமும் நம்நாட்டின் நானிலக் காட்சிகளும். புலவர்மணி ஆ. மு. ஷரிபுத்தீன் | 1997 |
| 10 | முதுமொழிவெண்பா ,, | 1997 |

புலவர்மணி - அல்ஹாஜ்

ஆ. மு. ஷரிபுத்தீன்

# நம்நாட்டின்

# நானிலக் காட்சிகள்

அன்னை வெளியீட்டகம்

மருதமுனை

# குறிஞ்சிக் காட்சி

நாகம் பூத்த நடுநிசியில் நாக மிரைக்கு நடந்துவர
நாகம் நெளிந்து நகர்ந்துசெல நாகம் மிதிப்ப நசுங்குண்ணும்
நாக மணிநி லாச்செய்ய நாகக் கொம்பர் மீதமர்ந்து
நாகங் குழவிக் கமுதூட்டும் நாகம் நாப்பண் செறிநாடே

தலைவால் தெரியா வட்டைபுகும் சருகும் புதரும் பாராது
மலையின் சரிவில் விரைந்தேறி மரங்க ளோறும்-
பால்சேர்த்துத்
தொலைவிற் றோற்றுந் தொழிற்சாலை தொடருங் குமரித்-
தெம்மாங்கு
மலையில் மோதி யெதிரொலிக்கும் வசந்தம் மிகுந்த-
தென்நாடே

கூவல் பொங்கிக் குபீரென்னக் கொடுமுடி யிழிந்து-
வழிந்தோடித்
தேவர் கொட்டும் வெள்ளம்போன் மேல்கீழ்த் திசையாய்-
வீழியாறுந்
தாவித் தழுவு மியந்திரத்தாற் சக்தி மின்னைத்-
தோற்றுவித்துப்
பூவி னிருளைப் போக்கடிக்கும் புதுமை காணு மென்நாடே

மலையின் முகட்டில் மனிதவடிப் பதிவுப் புனிதங்-
காண்பதனை
மலையுள் நுளையும் புகையிரதம் வான்முகி லூடே-
செல்வதனைச்
செலவிற் றிரும்பி மாவலியும் நிலத்துட் புகுந்து போவதனை
உலகி லிணையில் புதுமையென வுடைய தெங்கள் வளநாடே

வேறு

நவமணிக் கவண்கல் கொண்டு நம்பியர் கிள்ளை யோச்சத்
தவறிக்கல் பலாப்பழத்தைத் தாக்கியூ டப்பாற் பூகஞ்
சுவறச்செய் தகன்று குன்றச் சென்னியிற் கொழுந்து-
கொய்யும்
நவமணி தோளிற் கூடை தகைந்தம ரீழ நாடே

பலாப்பய னொழிய மாவும் பயன்றரப் புளியு மீரப்
பலாப்பயன் றந்து நிற்பப் படர்கொடி மிளகும் பூகக்
குலாப்பய னப்பாற் றோடை கொள்பொருள் கோப்பி-
கொக்கோ
எலாப்பய னொவ்வொன் றாக வீந்திடு மெங்கள் நாடே

வேறு

பிறப்பிற் செல்வன் பிரதி கருதான்-
பிறருக் குதவு வான்போலச்
சிறப்பிற் பொழியும் மாரிப் புனலு மூறு புனலுங் குறையாதே
வறப்பின் பொழுது மாறுகை கொண்டு-
நாற்றிசை நிலமு நலங்கானச்
சிறப்பின் வளப்பம் செயமலை மொய்யல்-
செறிந்து விளங்கு மென்நாடே

வேறு

விழும்பலாக் கனியின் றேறல் வெள்ளமுங் கமுகம் பூவின்
இழிநறா வெள்ள மும்மா வின்கனி கனிந்த ழிந்து
ஒழுகிய பாகின் வெள்ள மும்மலைச் சுனைநீ ரோடு
நழுவிப்பல் படிசெய் பாய்ந்து நல்கிடும் விளைவு மாதோ

வேறு

சுரங்கக் கண்ணிருந் தூறி வரும்புனல்-
குறைவி லாதருள் செல்வ மெனத்தரும்
சுரங்கக் கண்ணகழ்ந் தாய்வித மாமணி-
சுவன போகமாம் செல்வ மெனத்தரும்

சுரங்கக் கண்ணுறு காரிய மாங்கனி-
சொர்ண மேலெழு செல்வ மெனத்தரும்
சுரங்கக் கண்ணுறு நெய்யினை யாய்கிறார்-
கோடி பொன்றரு செல்வம தாகுமே

வேறு

தோர்ட்டிக் கடங்கியுறு பெறும்பொதியைக்-
கௌவிப் பின்றொட ரும்பாகன்
காட்டும் வழிநடந்து கால்சறுக்கா தேறியுயர்-
குன்று போலும்
மேட்டிற் கொணர்ந்துதரும் வெங்களிறும்-
தவசப்பை வெரிந்மேற் கட்டி
ஒட்டிவருந் தாவளமு முண்டீழக் குறிஞ்சியுயர் மாநிலத்தே

# முல்லைக் காட்சி

தேனனி மொய்க்கு மிறால்கண்டு தேனசை கொள்ளு-
மிளமந்தி
தேன்வதை பிய்ப்பத் திரடேனீ துரந்து கொட்டப்-
பதைப்பதனைத்
தேன்றுளி யுண்ணுந் திருட்டுநரி தேர்ந்துபல் லிளிக்கு-
மரமலர்ச்செந்
தேன்சொரி பழனம் பலவேயுந் திகழு மீழ மெந்நாடே

துள்ளித் திரியும் மான் கன்று துணையா யுனக்கு விளையாட
வள்ளிக் கிழங்குந் தேன்வதையும் வகிர்ந்த வூனு முன்றந்தை
அள்ளிக் கொணர்வார் கண்வளரென் றாராட் டிசைத்துத்-
தினையரைக்கும்
வள்ளிக் குறத்தி வாழ்குடிசை வரிசை யுறைகான் வளநாடே

வானம் பார்த்த பயிரினங்கள் வளருஞ் சேனைச்-
செய்கைதனைக்
கானந் திருந்திச் செய்தங்கு காணுந் தவச தானியங்கள்
ஊனுஞ் சேர்த்தூ னுணவாக வுற்றார்க் குதவும் வேடர்வதி
கான மழித்துக் கழனிபல காண முயலு மெந்நாடே

யூகந் தரையி லிறங்காதே தொடர்ந்து பலகல் தாவிவர
நாகம் வல்லி யிடைகோடு நகரா திடுக்கி நிலைகொள்ளச்
சாகம் முதலாம் பருமரங்கள் சடைத்துச் சுயமாய்
வளர்ந்தோங்கி
மேகங் குளிர்ந்து மழைபொழிய விண்ணுயர் பழனஞ்-
செறிநாடே

வேறு

மருதங் கிளிகள் கதைசொல்ல வான்முகில் கண்டு குயில்கூவ
குருவிக் குலங்கள் கனியுண்டு கூடிக் குலாவி யிசைபாடத்
தருவாம் பதியை வல்லிசதி தழுவிக் கொள்ள வசந்தமெனும்
பருவம் மலர்த்தார் புனைவிக்க வளரும் முல்லை வளநாடே

நரியார் கூடி யூளையிட யானை நர்த்தன மாடிவர
வரியார் புலியும் கரடிகலை வடிகால் கூடிப் புனல்மாந்த
விரியுந் தோகை மைனாப்புள் விளையாட் டயருஞ் சுயமாக
மிருகக் காப்புப் பிரதேசம் விளங்கும் முல்லை வில்பத்தே

குயிலி னோசை கேட்டுமகிழ் மயில்கள் கலாபம் விரித்தாடத்
துயிலும் யானைக் கொம்பினிலே குரங்கு தொற்றிக்-
கூத்தாடும்
வயிரஞ் செறிந்த மரக்காவுள் வளரும் கலையும்-
பிணையினமும்
வெயிலும் நுழையா வாரணியம் விண்ணை யளக்கும்-
வளநாடே

வேறு

கானடை யதர்நடந்து கானிடை தளவாய் கண்டு
கானடை யுயரினப்புல் கறித்தசை படுக்குங் காட்சி
கானடை மீன்க ளொக்குங் கறவைசா லமுத வெள்ளைக்
கானடை வளர்க்கும் பண்ணை கானிடை வளரும் மாதோ

வேறு

கானம் பாடுங் கலைவல்ல பாணனோர்
காலை வேளையில் யாழினைக் கைக்கொடு
கானம் புக்குச் சிறுபொழு திற்புதுக்
கானம் பல்லுயிர் புள்ளொலி கேட்டதிற்
கான மேழு சுரமுங் கலந்திசை
காது லாவத் திகைப்புற் றமைந்திடும்
கான வின்ப மனுபவிப் பாரொரு
கான மெனும்பெயர்க் காரண மாயுமே

வேறு

மாடப் புறாச்சங்க நாத மொலிக்க மான்கன் றுதுள்ளிச்-
சதுர்நட மாடும்
கோடமர் குயிலினங் கூவெனக் கூவத் தோகை விரித்துநீல்-
மஞ்ஞைக ளாடும்
பாடும் வண்டினம் ரீங்காரஞ் செய்யப் பாய்ந்து மந்திகள்-
நர்த்தன மாடும்
நாடெம தீழத் தியலிசை பயிலும் நடன சாலையை-
யொத்தது கானமே

## மருத காட்சி

கொக்கின் கனியுணக் குறுமீன்கள்-
குளத்தின் கரையைக் குறுகிவரக்
கொக்கின் குலங்கள் குறிவைத்துக்-
கொத்தித் தின்றூ ணயர்ச்சிபெறக்
கொக்கின் மேல்வெண் படாம்போன்று-
கூடி யிருப்பக் குளைமேயும்
கொக்கின் கனைப்பால் விண்படரும்-
குளங்கள் மலிந்த தெந்நாடே

வேறு

நாறு கொண்டு நடுமக ளிர்பகர்-
நளின காவியம் பண்ணொலி கேட்டவன்
மாறு கொண்டுதன் மறுப்பட ருங்குரன்-
மந்தி செய்யச் சினங்கொண் டணிவளை
சேறு கொண்ட செழுக்கர நீக்கியே-
சேணெறிந்து புடைத்திடத் தாக்குணு
மூறு கொண்டும் வளையினைக் கைக்கொடு-
மோடுகின்றது பல்லிளி செய்தரோ

களஞ்செ துக்கி யரக்குப் புதைத்தவர்-
கடற்பு னலடம் பங்கொடி காவலாய்
களம் நிறைத்துக் கதிர்ச்சூ டெடுத்ததைக்-
கலைத்துக் குவித்துக் காரெரு மைக்கடா
களமி றக்கி வளைத்து நடத்திடக்-
கசங்கு பொலியினைக் காற்றினிற் றூற்றியே
களங் குறித்து வருவிருந் தீந்தபின்-
கணக் கெடுத்துக் களனி பொலிவரே

வேறு

பனங்கிழங் கொடியற் பிட்டும் பனாட்டொடு கட்டி வெல்லம்
தினம்பக லுணவாய்க் காந்தன் செய்கமம் தலைக்கொண்-
டில்லாள்
பனந்தடுக் கமர வைத்துப் பசிதணித் தகலும் பாங்கர்
பனந்தரு வடலிச் சாரல் வடதிசை கொண்ட நாடே

காவியஞ் சேடி சூழக் காதல னிரவி கண்டு
தேவியங் கமலம் பூக்கும் நீர்நிலை நிரப்பிச் செல்லும்
மாவலி கழனி யாதி கங்கையாற் கழனி யெல்லாம்
பூர்விகம் போன்று செந்நெற் பொலியுமெம் மீழ நாடே

குருவிகள் கானம் பாடக் குறுபறை தவளை தட்ட
மருமுகை விளக்கஞ் செய்ய மலர்த்தொகை யலங்க ரிப்ப
விருந்தினர் நாரை கொக்கு விரும்பிவந் தமர்ந் திருக்க
திருவிழாக் கோலம் பூண்டு திகழ்தருங் கயங்க ளெல்லாம்

மாவலி திசைதி ரும்பி வரள்பிர தேசங் கொண்ட
ஆவலை யறிந்து சென்றாங் காதியி லிருந்து தூர்ந்த
பூவலை நிரப்பி மாந்தர் புதுக்குடி யேற்றங் கண்டு
தேவலை யளவிற் பொங்கித் திரவியங் கொளிக்குங் காணீர்

வேறு

கன்னல் முறித்துணும் கைம்மாவைக் காவலர் கலைக்க விளை
செந்நெற் கழனியுட் சென்றழி பாடுகள் செய்துநிற்பக்
கண்ணுற் றிளைஞர் கவணெறிந் தோச்சக் கயமுளக்கி
யுண்ணும் புனலுங் குவளையும் பாக னுறுமளவே

வேறு

ஆண்டுபல வாகவழி தூர்த்தழிவு கண்டு
மீண்டுநிரு மாணமுறு செய்குளங்கள் யாவு
மாண்டவளந் தாங்கிவிளை வோங்கவரு மதனால்
மாண்டவுயிர் மீண்டநிலை பூண்டதெங்கள் நாடே

வேறு

கற்பினுக்கு வரம்புசெய்து கன்னிமுற்றிக் கருவுயிர்த்த
களிப்பி னாலே
தற்பெருமை கொண்டுதலை நிமிர்ந்தில்லப் பாரத்தாற்
றலைசாய் வுற்றுப்
பெற்றெடுத்த தாய்வணக்கஞ் செய்துகொண்ட தலைவன்
முதற் தக்கார்க் கெல்லாம்
நற்பயனைத் தந்துதவு நாரிநிகர் செஞ்சாலி விளையும் நாடே

## நெய்தற் காட்சி

மணியின் றாம மணிவலை ஞர்சிறு
மைந்தர் தங்கையர் செய்மணற் சிற்றிலை
மணிவிளக் கேற்றி மகிழ்ச்சியோ டாடுங்கால்
மனங் கொதித்துப் பரிந்திரந் தரற்றவும்
மணிபர லுருள் கிண்கிணி யோசை செய்
பாதங் கொண்டழி பாடுசெய் தாறுவார்
மணிச லஞ்சலம் பவளம் பலவிளை
பௌவஞ் சூழிலங் கையெங்க ணாடே

தென்னங் கீற்றினாற் பாய் முடைந்து
நீண்டு வளர்தாழம் விழுது நாட்டி
வன்ன வடம்பினால் வடந் தொடுத்து
வற்றற் பாளையாற் றுடுப்புண் டாக்கிச்
சின்னத் தோணியைச் சிறுகே ணியிலே
செலுத்தி விளையாடுஞ் சிறுவர் குழாஅம்
மண்ணில் விளையுப்புக் கொண்டு கூட்டி
மலைசெ யுப்பளங் காணு நாடே

வேறு

மன்னார்க் குடாவி னாழ்கடலில்
மைத்துன னுடனே படகோடி
பின்னாற் றொடுத்த வடங்கொடுத்து
மீன்கிளை யூடே சுளியோர்டி
பன்னாள் விளைந்த மூத்துறையும்
பன்னற் சிப்பி வாரிவரும்
பொன்னார் முத்துச் சலாபமொளி
பொருந்து மீழ மெந்நாடே

விண்மீன் போலும் விளக்கொளிர
விரிந்த வான்போ லாழ்கடலில்
தண்ணென் னிரவி வோடமிவர்ந்
தலையை வென்று மீன்கொணரும்
வன்கண் வலைஞர் கரைக்கடலில்
வலையை யிழுப்பா ரசைந்தாடி
பண்சேர் கவிதை யேலேலோ பாடும் நெய்தல் சூழ்நாடே

வேறு

மாலை வேளையில் வீசிடு தென்றலை
மாந்தக் காதலர் மணற்கரை நண்ணுவர்
நீலக் கடலலை வந்து திரும்பிட
நண்டு வளைதுறந் தோடக்காண் நங்கையர்
சேலை மார்பின் நெகிழப் பொருள்செயார்
நண்டு பின்பற்றி யோடக் கடலலை
காலை வாரி வீழ்த்த நனைதுகில்
கைகொ டேகுவர் கணவரைக் கூடியே

வேறு

சின்னஞ்சிறு தோணியிவர்ந் தோடை சென்று
கிண்ணங்கனி யாய்ந்துவிளை யாடியுயர் வேர்செய்
கண்ணாவிடை தோணியிழிந் துயர்ந்தமணல் மேட்டில்
புன்னைமலர் தூவியிளம் பாலர்மகிழ் கின்றார்

வேறு

விரிந்தகடல் நூலறிஞர் மனங்க ளொக்கும்
வீசுதென்றல் சாந்தியருள் மதங்க ளொக்கும்
பரந்தமனற் பரப்பிளைஞர் மனங்க ளொக்கும்
படர்கொடிகள் வறுமைவாழ் வேழை யொக்கும்
பிரம்புசுய நலச்செல்வர் மனங்களொக்கும்
பிரண்டைகொடை விரும்புமெளி யாரை யொக்கும்
கரம்பிளைஞர் தொழில்கருதா மனங்க ளொக்கும்
கடற்பாக்கங் கொண்டுளதெம் மீழ நாடே

## வேறு

இளஞ்சிறார் பிய்த்து விட்ட விராவணன் மீசைப் பூவைச்
சுழன்றசை காலுருட்டத் தொடர்ந்தவ ரோடுங் காலை
வளர்ந்தக லடம்பு வவ்வி வலிந்தவர் கால்தடுப்ப
விழுந்தவ ரொருவர் மேலாய் விழநகும் நெய்தல் மாதோ

தெங்கினிற் பாளை தட்டித் தெளிநற விறக்கும் பள்ளர்
சங்கினில் வார்த்து நீட்டச் சதிருடன் வலைஞர் மாந்தி
மங்குமீன் பொரிய லுண்டு வலையளி மாற்றிக் கோத்துத்
தெங்குநீள் நிலலிற் றுஞ்சும் நெய்தல்சூ ழீழ நாடே

நாட்டினைச் சூழ்ந்து காணும் நனைகரை தெரிய நாவாய்
ஓட்டுவார் துறைய றிந்தாங் குட்டிபுக விராவின் போது
பூட்டியே யொளிசெ யெண்ணில் கலங்கரை விளக்கம் பூத்துக்
கோட்டுப்பூ மானும் விண் ணிற் குனிந்தவர் கண்ணின் மாதோ

புலவர்மணி - அல் ஹாஜ்
ஆ. மு. ஷரிபுத்தீன்

# உலகியல் விளக்கம்

அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

# தாய்மை

உதரங் கொடுத்துலகி லுண்டாங் குழந்தைக்
குதிரங் கொடுத்துணவா யூட்டி - எதிராய
துன்பமெலாந் தான்பொறுத்துத் தூயவனாய் வாழவைத்த
அன்புடையா ளன்னை யவள்.

குஞ்சைச் கவரவரு கொல்பருந்தைப் பின்தொடர்ந்து
அஞ்சாப் பறந்துசெலு மாம்பேடு - குஞ்சதனில்
எஞ்சாத அன்பென்னி லென்னேயிம் மானிடர்கள்
நெஞ்சோத மில்லாத வாறு.

தன்னை வழிபார்த்துக் காத்திருக்கும் பார்ப்பென்ன
உண்ணு முணவி லொருசிறிதைத் - தன்னலகில்
கொண்டூட்டுங் காக்கை குடம்பைக் கெனிலென்னே
அன்பில்லை யாயி னதற்கு.

எங்கேநீ யென்றறிய எண்ணினேன் கூப்பிட்டேன்
அங்கே விளையாடி னாகட்டும் - எங்கேனும்
தூரநீ செல்லாய் சுறுக்காக வந்தென்னைச்
சேரென்றா ளன்னையோர் நாள்.

சேய்மைக்கண் கல்விதனைத் தேடிப் பிரிந்தாலும்
சேய்பாசம் விட்டுப் பிரியாதே - தாயருகே
வைத்து வளர்க்க விழைந்தாலச் சேயறிவு
எத்தால் விரிவா வது.

# பெற்றார்

வாழ்ந்திருந்தோ மென்றிவ் வுகிலச் சுவடிருக்க
ஏந்துங் குழந்தைக் கிரந்திரந்து - சார்ந்ததவப்
பேறாகப் பெற்றார் பெரிதுவந்தார் தன்னலமே
வேறாகக் கண்டகுர வர்.

தன்னிற் சிறந்தோனாய்த் தன்மகனைக் காணவே
எண்ணுவான் தந்தை யிதனாலே – தன்னுடைமை
எல்லா மளித்து மியல்ஞானந் தந்துகலை
வல்லானாய்க் காண்பான் மகிழ்ந்து.

அறிவறிந்த மைந்த ரடையப் பெறுவார்
நெறியா யவர்சொல் லுபாயம் - முறையாயின்
ஏற்ற லவர்சொல் லினிதே கவுரவித்தல்
ஏற்றமெனக் கொள்வா ரிசைந்து.

தாயிட்ட சோறு தகப்பன்முன் வைத்துண்ணல்
சேயுற்ற செல்வ மெனப்புகல்வார் - தாயிட்ட
அன்போடு தந்தை யறிவுமா சாரநெறி
பண்புங் குழைத்துண்ண லால்.

பெற்றாரின் பிம்பமாம் பிள்ளை யவர்சொல்லும்
உற்ற செயலு முடைத்தாகும் - அற்றதனால்
பிள்ளைமுன் னேதும் பிசகா ரறிவுடையார்
எள்ளு முலகென் றுணர்ந்து.

# பிறந்தார்

எங்கோவென் தாய்பிறந்தா ளெந்தையுமெங் கோபிறந்தார்
இங்கேநா னென்னவிவர் காரணராம் - செங்கோலான்
தோன்றவைக்கு மெவ்வுயிரும் தொல்விதியி லுள்ளபடி
ஆன்றோர்க்கு முன்ன லரிது.

பெற்றமனம் பித்தாகும் பிள்ளைமனங் கல்லாகும்
பெற்றுவிட்டாற் பிள்ளையவர் பெற்றவரை – சிற்றெனவே
உய்த்துணர்ந்து கல்லை யுருக்கி யவர்முதுமை
வைத்துப்பா லிப்பார் மனம்.

மூப்படைந்த பெற்றார்க்கு முன்னும் முறைசெய்வார்
காப்பார்பின் சந்ததியுங் காண்பீரே – மூப்படையும்
பெற்றா ரவரைப் பெரிதும் மதித்திடுக
உற்றா லுபயோக முண்டு.

வண்டி யொருகாலை வள்ளஞ் சுமந்தேகும்
வண்டி மறுகாலை மாறாகும் – நன்மைந்தர்ப்
பெற்றா ரொருகாலை பேணுவார் பின்னொருகால்
அற்றாகும் அன்பி னவர்க்கு.

இளம் பெண்ணைப் பெற்றா ரளிப்பார் முதுபே
ரிளம் பெண்ணைப் பெற்றா ரளிப்பார் – வழிவழியே
வந்தமுறை யீதென்ப வாழ்வு சிறந்தமைய
இந்தமுறை கண்டீ ரினிது.

# உறவுமுறை

பெற்றாரைப் பெற்றாரைப் பெற்றாரே பெற்றார்தம்
உற்றா ருறவின் முறையாரை - மற்றார்
உறவின் முறையாகா ருள்ளன்பு கொண்டு
உறவு நிறைவாரு முண்டு.

ஈன்றதனாற் பெற்றா ரிணைந்து பிறந்துலகிற்
தோன்றியதாற் சோதரர்தம் வாழ்பயனாய் - ஈன்றதனால்
பிள்ளை யுறவுமுறை பேருலகிற் தாந்தாஞ்செய்
துள்ளத்தன்றி யில்லைவே றொன்று.

சனப்பாங்குஞ் சார்புஞ் சகத்திலவர் கொள்ளும்
மனப்பாங்கு கொண்டு மதிக்க - இனத்தாலே
தாழ்ந்தோ ருயர்ந்தோர் தரஞ்சேர்ந்தா ரவ்வவரைச்
சூழ்ந்தாரென் றெண்ணப் படும்.

அடிவே ருயிர்கொல்லு மாகுங் கதிரால்
படிவாழுஞ் செந்நெற் பயிர்போல் - குடியொருவன்
மாந்தர் துயர்துடைப்பான் மற்றொருவன் வல்வினையால்
காந்துந் துயர்படைப்பான் காண்.

அகலக் கிடந்தாலும் வேர்செடியைக் காக்கும்
இகவா திரத்தப் பிணைப்பும் - அகலா
திடங்கால நீட்சி யுறவுமுறைக் கில்லை
படரு மெதிர்பாரா வாறு.

## உளத்தூய்மை

வஞ்சனையுஞ் சூனியமும் வந்து பலிக்காதே
நெஞ்சந் தெளிந்த நீர்மையர்மேல் – வஞ்சனையை
நம்பினார்க் குண்டுதான் நம்பா தவர்க்கேது
அம்புவியோ ரஞ்சுந் திறம்.

அகத்தி னழகமைவா ராரும் விரும்ப
முகத்தி னழகுசெய முன்னார் – அகத்தின்
அழகியல்பாய்த் தோன்று மவர்முகத்தி லென்னே
யழகுக் கழகுசெய் வார்.

மூடி மறைத்தபொருள் முக்கியமா யெண்ணுமனம்
மூடி திறந்தபின்னே மாறுவதேன் – மூடியதன்
பொய்த்தோற்ற முண்மை மயக்கென்க பொய்மெய்மை
உய்த்துணர்வார்க் கில்லை யது.

தேக சுகமுண்டு தேசு முகமுண்டு
பாகு மொழியுண்டு பண்புடனே – ஆகும்
வளத்தோடு காண்பீர் வகுத்த தொழின்முயற்சி
உளத்தூய்மை யொன்றிருந்தக் கால்.

பகையொழிய வேண்டின் மருந்தொன்று கேண்மின்
பகைசெய்த தீது குறித்து – மிகையாக
எண்ணித்தான் வன்மம் எடுக்காதே யன்னவரை
மன்னிப்ப தந்த மருந்து.

# மாசு மனம்

இற்றுவிடா தென்றே யெதிர்ந்துவருங் கொப்பெல்லாம்
தொற்றித் திரியுங் குரங்குநிகர் - மற்றெதையும்
நோக்கா தலையுமனம் நுண்ணுணர்வா னல்வழியே
போக்கார் துயருழப்பார் போய்.

கூரைக்கு மேனின்று கொக்கரிக்குஞ் சேவலது
போருக்கு வாவென்று கூப்பிட்டுப் - போரில்
எதிரியால் வீழு மிறுமாப் புடையார்
பதியில் மிகவுண்டு பார்.

வாசற் படிகிடந்து வந்தவர்மேல் வள்ளென்னும்
யாசிக்க வந்தா ரிவரென்றே - யோசிக்க
என்னதிற மிந்நாய்க்கென் றெண்ணி யமைவாரே
மன்னுகுண மாய்வார் மதித்து.

முகத்தழக ரெல்லாம் முற்றுஞ் சிறந்த
அகத்தழக ராயிருப்ப தில்லை - அகத்தழகு
தோன்றும் முகபாவங் கொண்டு துலாம்பரமாம்
ஊன்றி யுணர்த லுடைத்து.

அடிமையாய் வாழ்ந்திருந்தோ னத்தனையி னீங்கி
விடிவேறா யாய பொழுதும் - அடிமை
யுளம்நீங்கான் தானியங்க வோர்தலைவன் தேடி
யுளனாக்கிக் கொள்வா னுணர்.

# மனச்சாட்சி

எல்லாப் படைப்பினிலு மேற்றமுளா னிம்மனிதன்
நல்லதீ தல்லா திதுவென்னச் – சொல்லிவிடும்
தூய மனச்சாட்சி யுள்ளத்தே யுள்ளதனால்
ஏய சிறப்பு மிவற்கு.

பகுத்தூணர்த்தி யும்மொருவன் பாவவினை நீங்கான்
பகுத்துணர்வா லென்ன பயனோ - பகுத்துணர்வைக்
கொன்றான் கடினசித்தங் கொண்டான் புறக்கணித்தான்
என்றதனா லானா தது.

பாவ வினைவிடுத்துப் பண்ணவற்கு நல்லடியார்
ஆவதற்காய்த் தந்த பகுத்துணர்வை – ஓவில்
கெடுத்தாள்வார் மேல்வருநாள் கேட்குங் கடாவினுக்கு
எடுத்துரைப்ப தென்னே விடை.

திரியழல் வீட்டை நிறைக்கும் கொந்துவிட்
டெரியழல் வீட்டை யெரிக்கும் - அரிய
பகுத்துணர்வு மானிடரை யாக்கு மழிக்கும்
வகுத்துணர்வார்க் குண்டு வழி.

பகுத்தறி வில்லாதா ரில்லை யதனால்
பகுத்துணரு மவ்வளவே பண்பும் - பகுத்தறிவை
கல்வியாற் றீட்டிக் கருத்தைத் தெளிவுசெய
எல்லையிலா வின்பமுண் டாம்.

# செயற்றிறம்

கருமந் தொடருமுனே கற்பனையிற் பேசி
கருமம் முடிக்கவிய லானில் - கருமம்
முடித்தே னெனப்பேசி முன்னிற்பா னன்றே
எடுத்த செயலாள னீங்கு.

எந்த விடத்துக் கெதுவுரிய தென்றாய்ந்தே
அந்த விடத்தி லதைவைக்க - தந்தநிலை
மாறி யமையி னழுக்காம் மனிதமனம்
நாறும் செருக்கு முறழ்ந்து.

கட்டுக்கோப் பொன்றைக் கடுஞ்சினத்தாற் காழ்ப்பதனாற்
தட்டி யுடைக்கக் கணம்போதும் - கட்டி
முடித்தவனுக் கன்றோ தெரியுமது முற்றப்
படியி லவன்பட்ட பாடு.

இயலாத வொன்றை யிதுமுடிப்ப னென்னேல்
இயல்வாயி னேற்று முடிப்பீர் · முயல்வாயின்
காலந்தாழ்க் காதே கடுகி முடித்திடுவீர்
ஞாலம் விரும்பு முமை.

சிந்தனையில் வந்தடையும் சின்னப் பிரச்சினையும்
பந்தம் நிலைத்துப் பதட்டமிகத் - தந்தாலும்
ஏதெந்த வாறியலு மென்றுவிதி யுண்டவ்வப்
போதந்த வாறென் றுணர்.

## கீழ்மை

தன்னை யொருபதவி தாங்க வுதவியவர்
தன்னை மறவாரும் தான்தோன்றி - என்னத்
தனக்குதவி யானவர்க்கே தான்துன்பு செய்யும்
மனத்தவரும் மாநிலத்தி லுண்டு.

துன்புறுங்கால் வந்து துயரந் துடைத்தவரை
இன்புறுங்கால் காண வெறுப்பாகும் - என்னே
உறுத்தியமுன் துன்பநிலை யுள்ள விடாதே
மறக்கடித்த இம்மனித மாண்பு.

கருமம் முடியுமட்டும் காலைப் பிடிப்பார்
அரிதி லதுமுடிந்த பின்னர் - பெரிதும்
உதவினா ரென்ற உணர்வே யிலராய்க்
கதவடைப்பார் காணாதே போன்று.

கதிர்த்தலையைக் கண்டாற் கருவம் பெருகி
விதைக்குமுத லுள்ளவெலாந் தந்த - முதற்குரியார்
அற்பமெனக் காண்பா றறியார் முறைபேச
இற்றைநிலை கண்ட ரிது.

ஆத்திரமும் மிக்க வவசரமு மாகாதே
காத்திரந்தான் வந்துற்ற காலத்தும் - ஆத்திரத்தால்
வாயகன்ற தேனும் வழங்காதே கைந்நுழைய
வாயொடுங்கு பாத்திரமா யாம்.

## நல்லோர்

நல்லவர்க்கு நல்லவரும் நானிலத்திற் தீதிழைக்கும்
எல்லவர்க்குந் தீயவரும் நல்லவரே – அல்லனசெய்
தீயோர்க் கெதிராவார் ஆதலினால் நல்லவரும்
தீயோரா மன்னவர்க்குத் தேர்.

நல்லவரென் றாருமக்கு நன்றாகா ராயின்பொய்
சொல்லியவ னாவேன் சுகுணரெனில் – சொல்லியுமை
ஏமாற்றி னேனென்பீர் எவ்வெவர்தம் பண்பினையும்
தாமாகத் தேர்ந்துணர்தல் தான்.

நேர்மை கடைப்பிடிப்பார் நிர்ப்பந்தங் காரணமாய்
நேர்மை பிறழ்ந்தியல நேர்ந்தக்கால் – ஓர்பொழுதும்
முற்றா ததுதோல்வி முன்னு மவமானம்
பற்றாவ தில்லை மனசு.

செந்நிறமாய்த் தண்மதியம் சேணுதித்த நாளடுத்தி
மின்னு புயலும் பெருமழையும் – முன்னியது
தண்ணளியார் கண்சிவக்கத் தாங்கா நிலையெய்தும்
உண்மைக் குவமையென லாம்.

நம்பிக்கை கொண்டவர்கள் நாயனிடத் தொப்புவித்த
எம்முயற்சி யும்முடிப்ப னன்னவனே – இம்மதத்தில்
சற்றுஞ் சறுகாதோர் சார்வார் தமதுவினை
முற்றும் முடிக்க முனைந்து.

# நல்லன

நல்லதெனக் கண்டொருகால் நானிலத்தார் செய்கைபய
னல்லதெனக் கைவிட் டொதுக்கிவிடல் - நல்லதெனத்
தோன்று முலகியநாள் தோறும் மறுமலர்ச்சி
தோன்றி வருமா றுணர்.

நல்லா ரவையத்து நாகரங்கால் பேணுவது
எல்லாரு மேற்கு மியல்பாகும் - நல்ல
நறுங்கனியின் சோலை நலமறியா தென்னே
குறும்புபல செய்யுங் குரங்கு.

மாந்தர் சமமாவார் வாய்ந்த குணநடையால்
சார்ந்த வகைபலவாய்ச் சாய்வாரே – ஆய்ந்தறிந்தே
அவ்வவருக் கேற்றமுறை யண்மிப் பழகுவதே
எவ்வெவர்க்கு மேற்ற நெறி.

ஏற்ற மிகுகரும மீங்கியல்வார் காணினவர்
மாற்றா ரெனினும் மதித்தவரை - போற்றுவது
மேலோர் குணமென்க மேதினியி லிவ்வியல்பு
சாலச் சிறந்ததென்று சாற்று.

என்னைவிட மற்றவர்க ளேற்றமுளா ரென்னுமுளம்
உன்னை யுயர்த்து முபாயங்காண் – என்னை
பிறர்கண் ணியந்தன்னை பேணுவையே லுன்னைப்
பிறர்கண் ணியஞ்செய்யா வாறு.

# தீயோர்

தேனிறால் செய்து திரட்டுந்தே னீயெல்லாம்
தேனருந்தல் காலத் துணவாகக் – கானவர்கள்
கண்டால் விடுவாரோ கைச்சூ ழெரியூட்டிக்
கொன்டிடுவா ரையோ கொடிது.

எந்தக் கருத்து மெதிர்த்துரைக்குந் தன்மையரை
உந்தன் கருத்துக் கிசைவாக்க - முந்தையுந்தன்
சொந்தக் கருத்துக் கெதிராகச் செப்பவவர்
உந்தன் கருத்துரைப்பார் காண்.

ஒப்புவிக்க வுன்னிடத்தே யொன்றுபெறத் தன்பகையிற்
தப்புவிக்கத் தன்பாற் பரிந்துரைக்க - செப்பரிய
முன்பகையின் வஞ்சம் முடிக்க முறைபேசி
உன்னைப் புகழ்ந்துரைப்பா ரோரர்.

வேண்டாது நன்றி விழைந்து முயர்ந்தவரே
தூண்டுவார் தேடித் துயரிழைக்க – மீண்டும்
சமயம் வருங்காற் சமாதானம் பேசித்
தமரா யுறவாடு வார்.

பாடுபடப் பாத்திருந்து பண்பிலா தப்பயனில்
கூடுவார் பங்கு கொடுபோகச் - சாடும்
அவமானம் நோக்கா ரருகிருந்து மீனின்
செவியினிலே கோப்பாரைப் போன்று.

# நற்குணம்

தீதிழையாப் போதுன்மேற் றீர்க்கும் பழிக்காய்
பேதுறா யுள்ளம் பிணங்காயே - யாதொருநாள்
உண்மை யுணர்வா ருனக்கா யிரங்கிடுவார்
உண்மையழி யாதென் றுணர்.

தன்னைக் கெலித்தான் தருகண் தனைவியந்து
அன்றானை யுள்ளால் வெறுக்காதான் - தன்னையே
மாவீர னென்ன மதிப்ப ரறிவாளர்
ஈவீர முண்மை யறிந்து.

எல்லோர்க்கு மொவ்வோர் குணங்கொள்கை யுண்டேனும்
எல்லாம் பொருந்துவதா யெந்நாளும் - செல்லாதே
என்னவறிந் தொப்புரவு செய்வாரே கூட்டுறவு
தன்னைக்கை யேற்றொழுகு வார்.

தெய்வவிசு வாசமுளான் சீரியசன் மார்க்கநெறி
நைவிலா வாழ்க்கை நலமுடையான் - வையகமே
கண்டஞ்சு மன்னான் கருத்திற் கிசைவாகும்
விண்டாற் பணியும் விரைந்து.

உன்னின் மெலியாரை யுன்னிடுக வுன்னையுமே
அன்னாரு ளொன்றாய் நினைந்தமைக - அன்னதனால்
அன்னாருக் குன்பணியை யர்ப்பணிக்க வுன்னிதயம்
எண்ணி யமையு மிசைந்து.

## கோபம்

சொந்த நலனுக் கெதிராவார் தம்முடனே
வந்த வகோர மனவெழுச்சி - உந்தும்
சினமென்ப தீது செறுத்தான நல்ல
குணமென்ப வாழு முயிர்க்கு.

எளியார்மே லேறு மிடையார்மேற் சீறும்
எளியார்மேல் வந்தசின மாறும் – உரியார்
வகுத்தறிந்தாட் கொள்ளும் வகையாற் றெரியும்
பகுத்தறிவு கோபத்துக் குண்டு.

அடக்கி யடிமைசெயு மாழ்சினமும் வீரன்
அடங்கி யடிமைசெயும் மூடன் – இடங்கொடுத்தால்
செய்யாத செய்வித்துத் தீராத் துயருழற்றி
ஐயோவெந் தீயா யறும்.

மெய்ப்பாட்டி லொன்றாம் வெகுளி யதுவுயிரின்
வைப்பாகு முற்ற துணையென்க - மெய்ப்பாது
காப்பாக வைத்திருப்பான் கைவாளால் தன்னுயிரை
மாய்ப்பானின் மூட னெவன்.

முன்கோபங் கொண்டொருவன் மூட்டுங் கொடுவினையால்
பின்பாடு பட்டழியும் பேதைமையை – முன்பாகக்
கண்டிருந்துந் தானடங்கான் கற்றும் மிகவறிவு
கொண்டிருந்து மென்னே குணம்.

## கல்வி

நூல்பல கற்றுப் பெறுநுண் ணுணர்வினிலும்
சால்புடையார் போதனையைக் கேட்பதுவே - மேல்வளரும்
பொற்புடையார்க் கேற்ற பொருளாகு மாதலினால்
கற்றலிற் கேட்டலே நன்று.

இம்மொழியிற் தான்கல்வி யென்றில்லை யேய்ந்துவரும்
எம்மொழியி லேனும் பெறலாமே – அம்மொழியை
கற்றா லறிந்து கருத்துத் தெளிவாகிப்
பொற்படைய முன்னல் பொருள்.

காணிக்கை யாமென்ப கற்றான் குருசொல்லை
பேணி யதுகாத்து நிற்பதுவே - பூணிப்பை
விட்டான் நிதியம் விரும்பிச் செலுத்திவழி
பட்டாற் பயமென்ன காண்.

இருமையிலுங் கைதாங்கு மெய்ம்முணர்வைத் தெளிய
வருநெறியும் வல்லவனைத் தேரும் – ஒரு நெறியும்
கார்ட்டுங் கருந்தனமாங் கல்வி யிருபொழுது
மீட்டுவா ரேற்பா ரிசை.

கற்கும் பொழு கசப்பாகுங் கல்விதனைப்
பொற்பி னிருந்து புரிந்துகொண்டால் – அற்புதமாம்
தேம்பாகு தின்னத் தெவிட்டா தனையதது
வேம்பை விரும்பக் கரும்பு.

# கல்விப் பயன்

வாருங்க ளென்று வரிசையுடன் கூப்பிடுவார்
ஊரின் முதன்மை யுமக்காகும் - தேரும்
அறிவின் மிகையுடையீ ராயி னறிந்த
நெறியின் நிலைநின்றக் கால்.

கற்றா ரிவரேதுங் கல்லா ரிவரென்ன
உற்றார் விழிகண் டுணர்வாமே – கற்றாரின்
கண்ணிற் தெளிவொளிவுங் காணுமே கல்லாதார்
கண்ணில் மருளும் கலந்து.

உபதேச மில்லாக் குறைகா ரணத்தால்
அபவாதஞ் செய்தாரு முண்டு – உபதேசம்
பெற்றுத் திருந்திப் பிறர்மெச்ச வாழ்பவரின்
குற்றம் பொறுக்கு முலகு.

தேனைப் பிழிந்தெடுத்துத் தேவைக்கெனச் செப்பும்
பானைக்கண் பெய்யிற்பாழ் பட்டாகும் - பேணத்தான்
மாட்டார் கலைமாண்பு மாசுண்ணும் புன்மையர்தம்
கூட்டாற் பிறழ்வாங் குணம்.

கல்வி யுடைமை யருமை யுணர்ந்தெவரும்
கல்வி பெறுமாறு காண்பதுவும் - கல்வி
ஒளியுடையார்க் காயா துவப்பதுவு முள்ளத்
தெளிவுடையார் கொள்ளுந் திறம்.

# கல்லார்

தெரியாத தொன்றைத் தெரியுமெனச் செப்பின்
மரியாதை செத்து மடியும் – தெரியாதே
என்பதனா லேது மிழிவில்லை யின்னொருவர்
நன்னயமாய்ச் சொல்வார் நமக்கு.

படித்தறிந்த மேதைகளும் பள்ளி புகுந்து
படித்தறியா மேதைகளு முண்டு – படித்தறிந்தும்
மேதா விலாசம் பெறாதாரை யென்யென்போம்
ஓதா திருந்தாலு முண்டு.

எத்துணைதான் தீயிட் டெரித்தாலும் சோறாகா
வைத்த வுலையரிசி யல்லாதே - அத்துடனே
வெந்தகல் போன்றார் விளங்கார் விரிவுரைகள்
அந்தகரே யூன்கண் ணவர்.

அறியாமை யாற்செய்தா ரையகோ வென்ன
நெறியாய்ப் பிழைசினக்கார் மேலோர் - அறியாத
அன்னார் விரும்பியதை யாற்றினார் மற்றொன்றை
என்னே எதிர்பார்ப்ப தே.

உலகியலை யோரார் உரைதெரிந்து சொல்லார்
நிலவும் நிலைதெரிய மாட்டார் - பலவும்
பிறர்தயவிற் செய்ய விழைவாரே யன்றி
அறிவரோ கல்லா தவர்.

## வாய்ச் சொல்

வாக்குறுதி செய்தால் மறவாதீர் நீர்கொடுத்த
வாக்குறுதி நீரே மறுக்காதீர் - வாக்குறுதி
செய்தாங்கு முற்ற முடித்திடுவீர் செப்பியது
பொய்யாகா வாறு புரிந்து.

காலையிலே யொன்று கடும்பகலில் வேறொன்று
மாலை திரும்பியதும் மற்றொன்று - கோலமதாய்
நிச்சயமில் லாதுரைக்கும் நேர்மை யறியாத
பச்சோந்தி யன்னாரு முண்டு.

பூரணமா யொன்று புரியா திருந்தாலும்
காரணங்கள் கண்டு கதைகட்டிப் - பூரணமாய்
ஆக்கி யுரைக்கு மவிவேக பூரணர்கள்
போக்கா லுலையு முலகு.

உன்கொள்கை முன்ன ருரைத்துவிட்டால் மற்றொருவர்
தன்கொள்கை தன்னை யறியாயே - உன்கொள்கை
முன்னுரையாய் மற்றாரை முற்று முணர்ந்ததற்பின்
அன்னாருக் கேற்ப வறை.

மதிக்கார் வரவேற்கார் வாய்மையிது வென்னார்
எதிர்பா ரிவரென் றறியின் - எதைத்தானும்
அன்னாருக் குணர்த்த வறிந்திருந்தும் வாய்திறவீர்
இன்னா வருமென் றுணர்ந்து.

# வன்சொல்

வன்சொ லுரைப்பழக்கம் வாய்ந்தோ ரதற்கன்றி
இன்சொ லுரைக்கும் பணியாரே - இன்சொல்
இதந்தருவ தானாலு மின்னார் மனத்தின்
பதந்தனைப் பார்ப்பீர் பகர்ந்து.

சீயென்று சொல்லீர் சிறுமைப் பதமதுகாண்
வாயொன்றிக் கூறப் பழக்காதீர் - நீயென்றும்
நல்லார்முன் கூற நாணுவீர் நாவினிய
சொல்லா லுவக்கு முலகு.

மற்றவர்தம் முள்ளம் வருந்தும் நிலைநோக்கார்
கற்றிருந்தும் வார்த்தை கடிந்தாள்வார் - மற்றவர்கள்
இன்னா ரியல்பிஃதென் றெண்ணி யமைவாரேல்
உன்னும் மிகுசாந்தி யுண்டு.

குறையிலா ரில்லை குணமனைவார் மேலோர்
குறையேசொல் பண்பினரு முண்டு - குறைகூறின்
உள்ளம்புண் ணாகுமென் றோரார் தமதுகுறை
உள்ளா திருப்ப தெவன்.

தம்மவர்மேற் தங்கடமை தம்மை மறந்துபிறர்
தம்மவர்செய் குற்றம் பெரிதாக - அம்பலத்தில்
தூற்றுவதேன் தம்மவர்செய் தூசகலு மாறுவழி
சாற்றுவதே சான்றோர்க் கணி.

# சிறுமை

மின்விளக்கின் சோதி விளங்க வதுகண்டு
மின்மினிதன் னுள்ளம் வெதும்புவதேன் - மின்விளக்கின்
மின்னற் பயனும் மிகுந்த வொளியுமதன்
பின்னொளிக் கில்லையென் றோ.

காரணத்தை யோரார்தங் காதற் குரியாரைச்
சேரவவர் பின்னே துயருவதேன் - காரிருளில்
ஊளை யொலிகேட் டொருநூறு மொன்றாக
ஊளையிடு மோரியனா ருண்டு.

மரண மெதிர்நோக்கு மன்னுயிரை யெல்லாம்
இரணமு மவ்வாறே யென்க - பரமனருள்
முற்றியது தேரார் முயல்வார் முரணாகப்
பற்றுவார் மிஞ்சும் பொருள்.

மணியுதிரும் போர்மிதியிற் செந்நெற்பூ முற்றி
மணியாகு முன்னுதிர்வ தில்லை - பணிவோடு
சொன்னபடி செய்யார் சிறியோர் பெரியோர்கள்
என்னபடி யேனு மிசைந்து.

ஆத்திரமு மிக்க அவசரமு மாகாதே
காத்திரந்தான் வந்துற்ற காலத்தும் - ஆத்திரத்தால்
சொல்லாத சொல்லுமவர் சொன்னதுதப் பாகிவிடும்
செல்லா தவர்வாயிற் சொல்.

# புன்மை

குட்டநிதந் தாழ்வான் குனிந்தவனைக் குட்டுவான்
மட்டில் மடைய ரிருவருமே - குட்டேற்பான்
கோழை குனிந்தவனைக் குட்டுவா னீங்கிதயம்
பாழானா னென்றே பகர்.

தருணமெதிர் பார்த்துரிய சாதனங்கள் முற்றிக்
கருமம் நிறைவுசெய நிற்ப – ஒரு சிறிதும்
ஈவின்றி யாங்கே யிடைநிற்பார் மற்றையவர்
நோவுண்ணு மாறுகரு தார்.

உம்மா லியலு மொருகை பிடித்திடுவீர்
எம்மாற் சுமைபொறுக்க வேலாதே - அம்மாவென்
றந்தரிப்பார்க் குள்ள மணுவும் நெகிழாதார்
இந்நிலத்துக் கென்னே பயன்.

தீதிழைக்க முன்னுபவர் தேடியொரு காரணத்தை
ஏது விதுவென் றெடுத்துரைப்பார் – கோதில்
கொறிக்கன்றைக் கொன்றுண்ட கோநாயைப்போன்றவரும்
இருக்கின்றார் கேடே யிவர்க்கு.

தாதுண் கருவண்டு தண்கயத்துத் தாமரையின்
மீதுணவு கண்டும் வெளியேறி - கோதுடைத்துக்
காவி குடைந்துண்ணும் காமுகர்தம் வாழ்வதனைப்
போவிப்பார் புன்மை நெறி.

## பெண்மை

பிறப்பினாற் பெண்ணினதா ரெல்லாரு மொன்றே
சிறப்பினால் வேறாவ ரென்க - அறத்தோடு
நல்லொழுக்க மன்பு நவிலும் விசுவாசம்
செல்லும் வழியுஞ் சிறப்பு.

வித்தைபல கற்றாலும் வீறாப் புரைத்தாலும்
எத்தகைய சாதனைதான் செய்தாலும் – அத்தனையும்
பெண்ணினத்தார் சொற்போரில் கையிழந்து பேதலித்து
கண்துளிப்ப தன்னா ரியல்பு.

விட்டுக் கொடுக்கார் விதம்விதமாய்ப் புன்மொழிகள்
கட்டிக் கதைப்பார் கதையிறுகின் - சட்டென்னக்
கண்ணீ ருகுத்துக் கதறி யழுவதுவே
பெண்ணினத்தார் கையா யுதம்.

பெண்ணினத்தார் மெல்லியலார் பேணப் பிறந்தவர்கள்
கண்ணியமா யாள்தல் கடனாகும் - பெண்பழியை
எண்ணீ ருளம்வருந்த ஏது மிழைக்காதீர்
பெண்பாவம் பொல்லா தது.

நாகரிக மென்றெண்ணும் நங்காய் குறையுடையில்
மோகமிகக் கொள்ளல் முறையன்றே - நாகரிகம்
மேனி முழுவதையும் மூடி மறைப்பதுவே
நானிலத்தார் கண்ட நெறி.

# பெண் தகவு

வாசுகியை நாயகியாய் வள்ளுவர்கொண் டாரதனால்
தேசு மிகவாய்த் திருவுற்றார் - ஆசுகவி
செய்து புகழ்பெற்றார் செந்நாப்போ தாரென்ன
எய்து சிறப்பு மிவர்க்கு.

கற்பு நெறிக்கும் கணிகையர்வா யூறலுக்கும்
சொற்பிசகா வில்லாள் சுடுதுளிக்கும் - பொற்பிலா
வஞ்சியர்வன் சொல்லுரைக்கும் வாழுங் குமரர்காள்
அஞ்சிடுக அல்லலவை யென்று.

எந்தக் கலவரமு மெய்தி னதனடிவேர்
வந்து முடியுமொரு மங்கையின்மேல் - இந்தவிதம்
ஆய்ந் தடங்கி னான்வாழ்வா னல்லா னடுமன்றம்
ஆய்ந்தடக்க வவா னறி.

சட்டென்று கொள்ளுங் கடுஞ்சினத்தாற் பெண்ணாவாள்
வெட்டென்று பேசி விமர்சிப்பாள் - கட்டியவன்
தன்னை யிழந்து தருக்குறா னாய்ந்தமந்தாங்
கின்சொலா லாற்ற லினிது.

பின்புத்தி யாற்பெண் பெரிதுந் தவறிழைப்பாள்
முன்புத்தி யாக்க முயலாதீர் - என்புத்தி
முக்காலுங் காகம் முழுகிக் குளித்தும் வெண்
கொக்காவ தில்லை துணி.

# இல்வாழ்க்கை

மணம்வேறு மெய்யுடையார் மாந்தர் பொருந்தும்
மணம்விரும்பு வார்காதல் மன்றல் - மணவாழ்வு
தித்திக்கு மென்றும் நிலைக்கும் பெருஞ்சீரும்
சித்திக்கும் பேரின்ப வாழ்வு.

கணவன் கருதுவதைத் தான்கருதுங் காதற்
கணவன் விரும்பிற் கிசையும் -- கணவன்
சுகங்காணும் பொற்பிற் சுமங்கலியாய் வாழ்க
இகபரத்தின் செல்வி யிவள்.

நம்புதல் வேண்டுந்தன் நாயகனை நாயகியை
நம்புந் திறத்தால் நலமுண்டே - நம்புதல்தான்
இல்வாழ் வியக்கு மிதயங்கா ணஃதின்றேல்
நல்வாழ்வு காணார் நயந்து.

கைப்பிடித்த தன்கணவன் கால்கட்டாம் காதலொடு
செப்பும் மகவவட்கு வாய்கட்டாம் - இப்புவியில்
பெண்ணாய்ப் பிறந்தாள் பிரியுநா ளாமளவும்
என்னே யிடுக்கணுறு மாறு.

கணவன் கருதுவதைத் தானுங் கருதுங்
குணவதியாள் கொண்ட கொழுநன் - பிணங்காரே
வாழ்வு சிறக்கும் வளமும் பெருகும்வாழ்
நாள்முடிவு மொன்றா மவர்க்கு.

## பதவி

மோகம் பலவற்றில் மாமோச மாயதொரு
மோகம் பதவிமேன் மோகமே - மோகம்
தணிக்கவெவர் தாள்பணியத் தாழ்ந்தோரை மேலாய்க்
சணிக்கமனங் கூசாரு முண்டு.

விலையுயர்ந்த பாகை விரும்புவான் தாங்கத்
தலைபொருந்து மாவென்று பார்க்க - தலைபொருந்தா
தானானுந் தந்திறனை யாயான் பதவிமேற்
போனானு மொன்றே புகல்.

ஏற்ற பதவிக் கிசைவாகத் தன்னிலையை
மாற்றி யமைப்பதுவே மந்திரமாம் - ஏற்றதனை
தீர்க்கமுட னாற்றிடவுஞ் சீர்மை மிகப்பெறவும்
மார்க்க மறிந்திடுக மன்.

மாசனத்தின் சேவை வழங்கும் பெரும்பதவி
ஆசனத்துக் குள்ளா ரருங்குணத்தார் - மாசனத்தின்
நல்லெண்ணங் கொள்வார் நலம்பெறுவார் நானிலத்தே
யல்லாதார்க் கில்லை யது.

பெரும்பான்மை வாக்காற் பிரதேசந் தேர்ந்த
ஒருதலைவ னாள்தற் குரியன் - சிறுபான்மை
தாமா யவனைத் தலைவனெனக் கொள்வதுவே
ஏமாப் படையு மியல்பு.

# அதிகாரம்

பிறர்தயவை நாடிப் பெறுமுயர்விற் சொந்தத்
திறமதனைக் கொண்டுயர்வே மேலாம் - திறங்கண்டு
மற்றா ருரிமை மறுக்கா ருயர்வளிப்பார்
பற்றும் விடாமுயற்சி யால்.

அண்ணாந்து பாரார் அதிகர்வங் கொண்டிடுவார்
எண்ணாத வெண்ணி யிறுமாப்பார் - ஒண்ணாதும்
தான்முடிக்கு மென்னும் தருக்குங்கீ ழோர்பதவி
தான் வகிக்க நேரும் பொழுது.

உற்றா ருறவினரோ டொட்ட விழையார்தம்
பெற்றா றெனினும் பெரிதாகார் - உற்றுழன்ற
நேற்றை நிலைமை நினைக்கா ரொருபதவி
யேற்பாற் பிறழ்வாகுங் கீழ்.

ஒத்தாசை செய்ய வுரிய வசதியெலாம்
மெத்த விருந்தும் விழைவார்க்கு – மெத்தனமாய்ச்
சாலா தெனவேதோர் சாக்குரைப்பார் தாம்பதவி
யேலாமை யேற்பி னினிது.

அதிகாரம் கிட்டியதென் றாங்காரங் கொள்ளீர்
அதுவண்ணான் மாற்றென் றறிவீர் – இதுபொழுது
காட்டுந் தருக்கஃது கையிகந்த காலத்துச்
சூட்டுங் கரும்பொன் முடி.

## ஈகை

எடுத்தாற் கொருகாலை யின்பம் தருமம்
கொடுத்தாற் கிருகாலை யென்க - கொடுக்கப்
பெறுவான் மகிழ்காணப் பேரின்ப வாழ்வு
பெறுவான் அதுகாண வாங்கு.

கொடுத்துவைத்தா லென்றோ கிடைக்கு மதனால்
அடுத்தார் துயரந் துடைப்பீர் - கொடுத்தார்
துயர்துடைத்த புண்ணியமும் தோன்றாத் துணையாய்
அயர்விலுத வும்பொருளு மாம்.

யானையுண் ணூணிற் தவறு மொருகவளம்
தீனியாங் கோடி யெறும்பினுக்கே - ஆனதுபோல்
செல்வந்தர் தம்பொருளி லீயுஞ் சிறிதளவு
பல்லோ ரெளியா ருணவு.

தேடி வழங்கும் திறனிலார்க் காய்ந்தளிக்கும்
வாடி யிருந்தன்பால் வந்தவரை - நாடியிழி
சொல்லால் வெறுத்ததுவுஞ் சொன்ன வகைபலவே
இல்லார்க்கிங் கீவா ரியல்பு.

வாய்விண் டுரையார் வறுமை தலைப்பட்டார்
போய்த்துயர் தீர்ப்பார் விழுமியோர் - பாய்நதிபோய்
பாலை புகுந்து பரவிவரும் நீர்மிகையால்
சோலை வளமாக்கு மாறு.

## பந்தம்

பந்தங் கொடுத்துப் பதவி யிருப்பவரும்
பந்தம் பெறமுயலப் பார்க்கின்றோம் - பந்தநோய்
இல்லாத தொன்றேனு மிந்நாளி லில்லையே
எல்லாமே பந்த மயம்.

தண்டனை யுண்டென்னச் சட்டம் பகர்வாரும்
கொண்டிடுவார் பந்தங் கொடுப்பாரும் - தண்டனைக்கு
ஆளாவா ரென்ன வறிந்து மளிக்கின்றார்
சூழாது தங்கரும மென்று.

முகத்துதிக்கா யோர்பதவி முன்னியவர் பின்னே
அகத்துப் பிரதிபலன் நாடி – முகத்தில்
கொடுத்திடுக வென்னார் குறிப்பா லுணர்த்த
இடர்படுவா ரென்னே யிவர்.

பதவி பெறவலைந்தார் பந்தங் கொடுத்தும்
பதவி யணைந்தமர்ந்த போழ்து - பதவியினாள்
பட்ட தனைத்தும் மறப்பார் திமிர்பிடிப்பார்
கொட்டம் மிகுவாரு முண்டு.

பந்தம் பெறுவார்க்குப் பக்கத் துணையாகப்
பந்தம் பிடிப்பார் பலருண்டு - பந்தம்
பிடிப்பாரின் பங்கும் பெறுவாரின் பங்கும்
கொடுப்பார் கொடுப்பார் குழைந்து.

## உலோபம்

வீசிவரும் மீனுக்கும் வெள்ளெருமைப் பாலுக்கும்
பேச விடாதாம் பிசாசென்பார் - யோசிப்பின்
தன்னிறைவு காணாத தரத்தாற் பிறர்க்கீய
எண்ணா மனமப் பிசாசு.

எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன
கட்டி மிகுகாவல் காக்கும்பேய் - ஒட்டி
உறுவார்க்கு மில்லை யுழைக்குமது வில்லை
பெறுவாய்க் கிலைகெட்டை யே.

கடுகு கழிவதனைக் காண்பான் மிளகு
கடுகிக் கழிவதனைக் காணான் - இடவே
சிறிதும் விரும்பான் தொகைபெரிதாய்ச் செல்லும்
தருணந் தவிக்கொணான் காண்.

கட்டிவைத்துக் காப்பதன்றிக் கைவழங்கான் வாழ்வினிலே
ஓட்டுவா ரில்லை யுதாசினமே - வட்டி
யிழித்துரையை யேனென்னான் ஏது மறியானாய்க்
கழித்திடவே யுன்னான் கதி.

வயிற்றுக் குதவா னுலோபியன்று கல்வி
பயிற்றென்பான் ஞானப் பசியால் - பயிற்றாதே
தன்னோடு வைத்துத் தருக்கி யிழப்பானேல்
அன்னா னுலோபி யறி.

# இரவு

முன்னா ளொருவன் முயன்ற கொடுவினையால்
பின்னாற் பிறரிடத்துப் பின்சென்று - என்னாதல்
ஈயென்ன வேண்டு மிழிநிலைமை யெய்துகிறான்
வாயுரைபொய் யாதார்தம் வாக்கு.

காணிக்கை கொண்டுசிலர் கைந்நீட்டு வார்கரம்வாய்
கேணி யொதுங்கிப் பிசைந்துநிற்பார் - ஏனிவர்கள்
ஏற்கும் முறைபலவி லீதென் றெனவறிவார்
பார்த்தீவார் பார்த்திரத்தின் பாங்கு.

வாகனத்த ராமளவும் வாளா விருந்தேற்கும்
ஊக மொருபுதுமை யாசகமே - வாகனத்தர்
கண்ணியத்துக் காயீவார் கைந்நிறையு மென்பதுவே
எண்ணு மவருக மென்.

வருந்தி யுழைத்துண்ண வாய்ப்பேது மில்லான்
தருமம் பெறுதற் குரியன் - வெறிதாகச்
சோம்பியே நாணம் துறந்தாங் குளங்கல்லாய்ச்
சாம்பிக்கை நீட்ட லெவன்.

முதலின் றிலாபம் பெறமுயல்வார் போற்சந்
ததமுங்கைந் நீட்ட விழைவார் - இதமன்றே
அன்பளிப்பை யேனு மவாவா ருயர்நிலத்தார்
தன்முயற்சி வாழ்வே தலை.

# அன்பு

இல்லாமை யால்வந்தா ரேவற் பணிசெய்வார்
இல்லா தவரோ விதயந்தான் - இல்லுடையார்
ஒய்வு வழங்கா ரொருபிழையும் மன்னிக்கார்
ஈவில்லை யென்னே யிவர்க்கு.

எங்கோ வொருகுழந்தை யேங்கிப் புழம்பியழ
அங்கே செவிப்புலனுஞ் சென்றுவிடப் - பொங்கி
யுளந்துடித் தென்கண் ணுகுத்துவதே னன்புக்
களநிறைந்து கான்றதனா லாம்.

ஆபத்திற் காணு மருமைச் சிநேகித்னைத்
தாபத்திற் தண்ணீர் தனைப் போல்வான் - கோபித்தும்
சாருந் துயரறிந்து தான்முந்துந் தோழமையால்
ஊரி லொருவ னவன்.

அன்னை தயையினிலு மான்ற கருணையுளான்
தன்னடியார் மீதெங்கள் தற்பரனே - மன்னுயிர்மேல்
அன்புசெய்வார் தம்மை யதிகம் விரும்புகிறான்
துன்புசெய்யா னென்றே துணி.

பெற்றெடுத்த வன்னை பிதாவிழந்து தத்தளிக்கும்
குற்றமற்ற செல்வக் குழந்தைகளின் - நிர்க்கதியை
எண்ணி யிரங்கி யருள்சுரந்து காப்பதுவே
அன்பின் சிகரமென லாம்.

# பெருந்தன்மை

துன்பமிழைப் பர்ரென்னத் தோன்றினுஞ் சார்ந்தவரை
அன்புசெய் தாள்வா ரறிவுடையோர் - புன்தருவும்
ஒட்டுணணி தன்னூ ணுறிஞ்சிவாழ் தல்கண்டும்
தட்டா திடந்தந் துறும்.

விளைவென்னா மென்றுணரா வெட்டெனவே வார்த்தை
பிழைபாடாய்ப் பேதை புகலும் - நுழைபுலத்தார்
அன்னா ரியல்பறிவார் அன்பின் நிறைமனத்தால்
எண்ணார் மறப்பா ரது.

வாசலுக்கு வந்துவிட்ட வன்கொடுமை செய்தவர்தம்
நீசத் தனத்தை நினையாதே - கூசியவர்
வேண்டு முதவி விரைந்து முடித்திடுவார்
மாண்ட குணநலத்தார் மன்.

தீயா ரயல்வாசம் செய்யும் பெருந்தகையோர்
ஆயா ரவரை யனைத்திடுவார் - காயாரே
ஒல்லும் வகையா லுதவுவா ரின்னுரையால்
நல்லாராய்க் காண்பார் நயந்து.

தட்டுப்பா டில்லேதே தன்சோ தரன்வாழ
விட்டுக் கொடுத்து மகிழ்வானை - மட்டில்
தியாகியென வாழ்த்துந் திகழ்ஞாலந் தான்கொள்
தயாதி யடையாமை கண்டு.

# ஆளுமை

அன்பினா லாளுந் திறத்தார்தம் வேலைநிதம்
கண்காணிப் பின்றிநிறை வெய்துமே - என்னே
தலையாவார் வேலைதனைத் தம்வேலை யாக்கொண்டு
தலையாய தாய்முடித்த லால்.

சுயாதீனம் வீழ்கைக்குக் காலென்பார் தானே
சுயாதீன னாயடங்கி வாழ்வான் - சுயாதீனம்
வீழப் பொறுக்கான் வீடுபெற வேவிழைவான்
ஆளப் பிறந்தா னவன்.

மக்கள் பணிசெய்து வாழும் பெருந்தகையோர்
மிக்க புகழுக் குரியவரே - மக்கள்
தலைவ ரவராவார் தம்மர் தரவெல்லாம்
நிலையா யவர்க்கீவார் நின்று.

நாவசைய நாடசையும் நர்வல்லா ரான்பீடத்
தாவ துலக வரலாறே - நாவன்மை
ஆளுந் திறத்தோ டமைவாயின் மாந்தரெலாம்
கேளுங் கிளையு மவக்கு.

எத்துணையார் தம்பக்க லீர்க்கப் படுவாரோ
அத்துணையே யாளுந் திறமவர்க்கு - அத்துணையே
அன்னார் தனித்தன்மை யாகும் பணியாளர்
எண்ணும் பணியு மிசைந்து.

# இரவல்

எடுக்குகாங் ற்பெற்றதுபோ லோர்சேயை மீளக்
கொடுக்குங்காற் செத்ததுபோ லாவார் – அடுத்தவர்பால்
தந்தேவை நோக்கிச் சார்வார் குணந்திரியும்
முந்தாதீ ரென்ன வரும்.

நம்பிக்கை கெட்டுவிடும் நாள்குறித்து வாங்கியதை
அம்முறையிற் சேர்க்க வறியீரேல் – உம்பொருள்போல்
காவந்து செய்து கருமம் முடிந்தவுடன்
தீவிரமாய் மீட்ட லினிது.

முட்டுப்பா டேக முதலுடையா ரில்லேகிக்
கட்டி யிருக்கும் பொருள்வாங்கிப் – பட்டமிடி
தீர்ப்பார் மறப்பார் திருப்பும் நினைவிழப்பார்
ஏற்ற மவர்க்கில்லை யே.

தேவைப் படுவதெலாம் தேடித் தமக்காக்கல்
யாவர்க்கு மொல்லுந் தகைத்தன்றே – தேவைக்கு
என்றும் இரவலையே யெண்ணா திருப்பதனால்
நன்று முடித்திடவே நாடு.

பஞ்ச புலனும் பகுத்துணர்வும் மெய்யழகும்
எஞ்சா துணவு மிவையெல்லாம் - துஞ்சாதான்
தந்தா னிரவல் தருக்கொழிமின் நல்லறிவால்
சொந்தமிலை யென்றுணர் வீர்.

# கைமாற்று

கைம்மாறும் போதுகருத்தைப் பிணித்தபொருள்
அம்மா வதுதிரும்ப வாகுங்கால் - சும்மாவோ
எத்தனைதா னின்னல் இனியில்லாப் பேரவலம்
அத்தனையுந் தந்தே யறும்.

வாங்குந் தனையும் வழுத்தும்வாய் வாங்கியதை
ஆங்கே கொடுக்க வமையுங்கால் - போங்காணும்
உன்னை யறிவே னொறுப்பே ணெனவசையும்
பின்னே பிதற்றுவது மேன்.

வர்ங்கியவர் மீட்கும் மனமுடையார் வாங்கியதை
ஆங்கதுபோற் றீர்க்கு மவதிவரை - தாங்குவது
தாராள மாகும் தயங்கிக் கருத்தழிய
நேரா திருத்தல் நெறி.

தேவைக் கொருபொருளைத் தேடிக்கைம் மாற்றாகத்
தாவென்ன வாங்கித் தனக்குரிய – தேவை
முடிந்தாற் பொருட்படுத்தா ருன்பொருளை வந்து
கடிதெடுத்துச் செல்லெண்பார் காண்.

சொந்தமென வொன்றிவ் வுலகி லெதுவுமிலை
முந்தையரைப் பற்றிவழி வந்தவர்க்கு - தந்ததுகை
மாற்றா யனுபவிப்பார் மாறிப் பிறிதொருவர்
ஏற்பார் வரன்முறையா யீங்கு.

# சாந்தி

சாந்தி விரும்பும் சகல வுயிரினமும்
காந்துங் கொடுவினையைத் தாங்காவே - சாந்தநிலை
தன்னுயிரின் தாக்கம் தனைநினைத்து முக்கரணம்
மன்னுயிர்க்கு வேண்டும் மதித்து

ஆரோக் கியமே யவாவு முடலென்றும்
சீரான வாழ்வுக் கதுவேண்டும் - ஓராதே
ஊறு விளைவித் துபாதை யுளவாக்கல்
கூறுன் னுடலேற்கு மென்று.

மனவே தனைபோன்று மானுடருக் கொன்று
கனவே தனைசெய்வ தில்லை - மனநோவு
கொள்ளாத புண்ணியர்கள் கொள்வார் மிகுசாந்தி
உள்ளா ருளமுறுத்து மாறு.

பிறந்த வுயிரனைத்தும் பின்னிறப்ப துண்மை
அறந்தானே யவ்வுயிரி னாக்கம் - இறக்குமுனம்
செய்தவற முன்னின்று செல்லு முயிர்சாந்தி
யெய்தவுறு காரணமா யாம்.

நிம்மதியைத் தேடி யலைகின்ற மானிடனே
நிம்மதியைக் காண வழிகேளாய் - எம்பெருமான்
தந்ததுண்டு போதுமெனக் கொள்ளும் மனநிறைவால்
வந்துவிடும் நிம்மதியப் பா.

## பொருள்

நாணயத்தை யுண்டாக்கும் நாட்டினிலே மாந்தருடை
நாணயத்தைப் போக்கடிக்கும் நாணயமே - நாணயத்தை
நாயகமாய்க் கொள்ளாரே நல்லறிஞர் தாமதற்கு
நாயகமா யாள்வார் நயந்து.

அறநெறியின் சேர்த்த அரும்பொருளோ தன்னை
உறுவானைக் காவந் துதவும் - நெறிதவறி
எப்படியுஞ் சேர்க்கும் பொருளிருந்து மில்லாதாய்ச்
செப்படி வித்தைபோ லாம்.

ஆங்கால மாகு மருஞ்செல்வ மஃதொழிந்து
போங்காலம் போகும் புதிதன்றே - நீங்காதே
சந்திக்குமுண்டு தகைகுறுநாள் முற்றிவர
முந்தியே யேகுவது முண்டு.

தாய்பிள்ளை யில்லை தயவுதாட் சண்யமில்லை
நோய் நிலைமை தாங்க வுறவில்லை - வாய்சிரிக்க
ஒப்புமுறை யில்லை யுயர்வா சனமில்லை
கைப்பொருளொன் றில்லா விடத்து.

வருந்தி யுழைக்காதே வாரா வரத்தாய்ப்
பொருந்தி வருபொருளு முண்டு - பெரிதும்
அறியா ரருமை யதனா லதனை
வெறிதாக வீணாக்கு வார்.

## கூட்டுறவு

சேர்ந்த குலம்மதத்தால் செய்யுந் தொழிற்றுறையால்
நேர்ந்த குடிப்பிறப்பால் நீணிலத்தில் - மாந்தர்
தமதாகக் கூடும் குழுவென்ப வொவ்வோர்
சமுதாய மாமென் றுணர்

கூட்டுறவை வேண்டுங் குடிவாழ்க்கை மற்றஃது
நாட்டிற் சமூக நலம்பேணும் - கூட்டுறவு
தன்னலம்போல் மற்றார் நலமும் விரும்பவரின்
முன்னும் மிகுசாந்தி யுண்டு.

எல்லார்க்கு மேற்ப வொருவ ரொருவரைமற்
றெல்லார்க்கு மேற்ப வொழுகுவதே - நல்லாரின்
கூட்டுறவு காணுங் குணமென்க பல்வேறு
கூட்டுறவு மவ்வாறு காண்.

ஐக்கியமும் நாணயமும் ஆயவிரு பண்புகளும்
முக்கியமாங் கூட்டுறவு முன்னிடவே - இக்காலம்
கூட்டுறவே வாழ்க்கைத் துறைபலவுஞ் செப்பமுற
நாட்டரசு கண்ட நெறி.

நல்ல வியக்கமென நாடொப்புங் கூட்டுறவில்
பொல்லா விலஞ்சப்பேய் போய்ப்புகுந்தால் - எல்லாமே
சீரற்று நாணயமுந் தீர்ந்து குடிநலமும்
வேரற்றுப் போமென் றுணர்.

## இரங்கல்

கண்ணை யெனக்களித்த கர்த்தனே காவந்து
பண்ண விமையளித்த பண்ணவா - எண்ணுங்கால்
ஈதொன்றுக் குள்ளநா ளெல்லாந் தொழுதாலும்
போது மெனலாகு மோ.

என்னை விசுவசித்தீ ரென்பக்க லுங்கடமை
தன்னை விடுப்பிரெனத் தான்மொழிந்தாய் - என்னிறைவா
என்செய லாவதொன் றில்லை யெலாமுன்றன்
சந்நிதிக்கண் சாட்டினேன் சார்ந்து.

தோன்றும் பொருளனைத்துந் துய்யவா வுன்னருளை
யூன்றி யுணர்த்து முணர்கின்றேன் - நான்தோன்றக்
காரணனே யுன்னடிமை காலமெலாஞ் செய்பிழைகள்
பூரணமா யாள்வாய் பொறுத்து.

உள்ளம் நினைப்பதனை யொன்று மொழிவின்றி
தெள்ளத் தெளிவாய்த் தெரிபவனே - கள்ளமறத்
தூய்தாயெ னுள்ளந் துலங்கத் துணைசெய்வாய்
ஆய்வாந் திறமு மளித்து.

சகலகலா ஞானத் தயாபரனே யென்ற
னகமதனை ஞானச் சுடரில் - பகுமுணர்வில்
தெள்ளிதா யாகுந் திறமளிக்க வுன்னருளை
யுள்ளினே னுண்டுன் னுவப்பு.

# பிரார்த்தனை

உன்னையே நம்பினே னுன்னருளே வேண்டுகிறேன்
உன்னளவி லேயென்னை யொப்புவித்தேன் - என்கருமம்
எல்லாம் பொறுப்பேற்பாய் என்னிறைவா விவ்வுலகில்
இல்லைவே றாரு மெனக்கு.

நல்லனவே செய்துவர நாடுகின்றேன் நாயகனே
அல்லனவுஞ் செய்தா லவைபொறுப்பாய் - வல்லவனே
உன்னிசைவை வேண்டி யிறைஞ்சினே னுன்கிருபை
தன்னிகரே யில்லா தது.

மக்களைத் தந்தவரில் மாபாசங் கூட்டினாய்
மிக்க சிறப்பு மெமக்களித்தாய் - ஹக்கனே
வாழப் பிறந்தார் வளவாழ் வளித்தவர்க்கு
நாளுக் கொருவளர்ச்சி நல்கு.

உயிர்த்தெழுநா ளுன்னருள்பெற் றுன்னடியார் நாப்பண்
உயிர்த்தெழச்செய் வன்மை யுடையோய் - செயிரறவே
எம்மிறசூல் கையா லெழில் கௌதர் நீர்குடிப்பார்
தம்மிடையே சேரவருள் தா.

தேனருவி பாயும் திகழ்சுவனப் பொற்பதியில்
ஞானபிதா நாத ரயலினிலே - நானமர
உன்கிருபை வேண்டு முயர்ந்தோயுன் சந்நிதியென்
கண்குளிரக் காணுநெறி காட்டு.

## பிரார்த்தனை

காதலியாஞ் சேரிப்பெண் தான்வரிக்கக் காத்திருக்கும்
காதலனைக் கூடுங் கணக்கறியாள் - காதலனாம்
அத்தனைநான் சந்திக்கும் அன்புநிறை போழ்துகளை
எத்துணையென் றெண்ணிக்கை யேன்.

தாகித்த வெள்ளாடு தண்ணீரைக் கண்டதனை
மோகித் தருந்தும் மறந்துவிடும் - ஏகனிடம்
வேண்டியது கிட்டின் விரைவில் மறந்திடுவார்
ஈண்டுள்ளோர்க் குள்ள இழுக்கு.

## அறிவு

போதம் பயபக்தி போன்றவற்றில் மிக்குள்ள
மாதவத்தோர் தம்மை மதித்தவர்சொல் - பாதுகொள்வார்
மாயவலை வீசும் மாதர்தம் மாயத்தில்
சாயமனங் கொள்ளார் சரிந்து.

அறியாத தொன்றை யறிந்ததாய்க் கூறேல்
நெறியாக வஃது நிலையா - வறிதே
அறிவா லுணர்ந்த வரும்பொருளு முற்று
மறியாத தாக்கி விடும்.

ஆராய்ந்து செய்க அரும்பணியை ஆய்ந்தறிவு
சீராய்த் தெரிந்து தெளிவடைக - நேராகும்
தன்னுணர்வு பெற்றுத் தலஞ்சிறக்கு மாறொழுகி
நன்னிலைக்கண் சேர்க நலம்.

கனிமரத்தைப் போலும் எழுதுகோல் இன்பக்
கனியதனைப் போலும் திருவசனம் - மனதிலெழும்
சிந்தனைகள் முத்துக் கடலாகும் என்பவே
முந்தையோர் கண்ட முறை.

சொல்லுங்காற் சோர்வின்றிக் கம்பீர மாய்ச்சொல்லல்
நல்ல கருத்துகளை நாவினிக்கச் – சொல்லல்
துருநீக்குஞ் செய்ய உயர்நடையை யென்றும்
உருவாக்கு மென்றே யுணர்.

மைப்புட்டி வில்லாகும் மாண்பின் எழுத்தாளன்
கைப்பட்ட கோலதன் அம்பாகும் – துப்பற்ற
கவைக்குதவா ரேதின்றிக் கட்டும் கதையால்
அவமதிக்கப் பட்டக்கா லன்று.

நெஞ்சில் வெகுளி நெருங்கிற்றான் தாழ்ந்தமைதல்
பஞ்சத்திற் தாராள மாய்ப்பழகல் – அஞ்சும்
அதிகாரி மன்னித்தல் ஆதியாம் மூன்றும்
மதியாளர்க் குள்ள மதிப்பு.

மாந்த ரழுந்துயரை மாற்றுவான் தன்னெதிரி
மீந்தா லவன்தாழ்வான் மேவாரை – ஆய்ந்து
பிழைபொறுப்பான் செல்வத்தால் வேறாகான் பண்பில்
விழையறிவில் மேம்பட் டவன்.

## நல்லோர்

மூத்தோரைக் கல்வி முதிர்ந்தோரைப் பண்புநலம்
வாய்த்தோரைப் போற்றாத வாலிபனைப் – பார்த்தால்
மரியாதை காண வழிவிலகிச் செல்லல்
பெரியார்கள் கண்ட நெறி.

உள்ளம் கறையாகும் ஒன்றும் உறையாமற்
தள்ளி விடுவார் தகைசான்றோர் - வெள்ளை
நுரைமுதலாத் தன்னுள் நுளைந்த தனைத்தும்
கரைவிடுத்துத் தூய்தாம் கடல்.

பணத்தினாற் சாதிக்க ஏலா தனவும்
குணத்தினாற் சாதிக்க ஏலும் - பணங்கொடிய
பாதகமுஞ் செய்யும் பகரின் சிறந்தகுணம்
சாதகமே உய்யுஞ் சமைந்து.

# தீயோர்

வேண்டாக் களைகளைந்தும் மீண்டுந் தழைகொள்ளும்
வேண்டும் பயிர்க்கோ வெகுசிரமம் - வேண்டாத
தீயகை விட்டாலும் தீரா தணுகிவரும்
தூயகைக் கொள்ள லரிது.

கண்ணுக் கினிய கவின்கனியி னெட்டிவிரை
கண்ணுக் கினிய மருந்தாகும் – எண்ணுங்கால்
கண்ணுக் கினியார் குணத்தாற் கசந்தாலும்
நண்ணு மொருகால் நயந்து.

ஊரைப் பிரிக்கின்ற வுத்தமர்கா ளோர்செடியை
வேரைப் பிரித்து வளர்ப்பீரோ – வேரைப்
புயலசைத்த தாவரங்கள் பொன்றியமை கண்டீரே
வயமிழந்து போக வரும்.

செருக்கோ டிறுமாந்து தெய்வபல மெண்ணார்
செருக்கடங்கித் தன்னுணர்வு தேர – நெருக்கமுறும்
சாதனங்க ளாக்கித் தளர்வு புரிவிப்பான்
ஆதனங்க ளாளு மரசு.

நன்றி பெறுந்தனையும் நல்லகதை சொல்லியதை
அன்றே மறப்பர் அடிவார்வார் - அன்றொருநாள்
வாயுணவு தந்தவரைக் கண்டாற்தன் வாழ்குழைக்கும்
நாயினுங் கேடா மிவர்.

பட்டகால் தானே படுமென்றா லேதொன்றிற்
பட்டகால் நோவப் படுமென்க - ஒட்டாது
கெட்டகுடி தானே கெடுமென்றாற் செய்வினையாற்
கெட்டகுடி தானே கெடும்.

எல்லார் நலனு மிணையும் பொதுப்பொருளை
வல்லார் சுவீகாரங் கொள்ளாதீர் – வல்லானே
கேட்பான் கணக்கென்னக் கொள்ளார் பயமில்லாக்
காப்பாளர் வீழ்வார் கனல்.

## பாவம்

வேலி யெனவிருந்து மெல்லியலைக் காவந்து
போலி பயிரழிக்கப் போதுமோ - கூலி
தருமிறையென் றெண்ணாத் தறுகணனும் மேனால்
உறுமோ விறைதன் னுவப்பு.

சீவ தயையின்றிச் செய்யுங் கொலைபின்னர்
தாவுந் தவறா தவனையே - பாவங்காண்
மற்றவரா லன்றி மதிகெட்டுத் தன்வினையாய்த்
தற்கொலையா யாயினு மாம்.

தன்னை யறிந்தாலும் தற்காப் பறியாத
கன்னியினை யேமாற்றிக் கற்பழிக்கும் - சின்னவனை
முன்னோன் முனிந்து முயல்வினையைப் பாழ்படுத்திச்
சின்னபின்ன மாக்குஞ் சினந்து.

## குழந்தை

தங்கும்பல் சம்பத் திருந்தென்ன வோர்குழந்தை
இங்கவற்றிற் கெல்லாம் பெருஞ்செல்வம் - தங்கள்
குலம்விளங்க வொன்றேனு மில்லாரை யூரார்
மலடென்று சொல்வார் வசை.

## மக்கள்

கான்முளையின் கீர்த்தி கதித்ததனால் முன்னோர்கள்
மேன்மை தரத்திற் குறைந்திடுமோ - வான்வெளியில்
எங்கும் பிரபை யிலங்கிவரும் விண்மீன்கள்
திங்கள் வரத்தேயாத் தேசு.

பெற்றவரை மைந்தர் பிரிவார் வரன்முறையாய்
மற்றவர்கள் திங்கள் கலைமானும் - பெற்றிவர்கள்
முன்னர் தனிமை முடிவி லதுவாவார்
மண்ணுலகு கண்ட வழக்கு.

# பெண்

பட்டம் பதவி பணங்கல்வி செல்வாக்கு
ஒட்டி வரத்தேடி யொண்டொடியை - கட்டிக்
கொடுக்காமற் காலங் கடத்துவது பாவம்
அடுக்காது யார்க்கும் அறி.

பணமிருப்பார் தம்மகளைப் பல்பொருளு மீந்து
குணமகனைத் தேடிக் கொடுப்பார் – பணமில்லார்
என்செய்வார் பாவம்தம் ஏந்திழையைக் கையளிக்க
இன்னலள வெண்ணலள வில்.

முள்ளிலையி லன்றி யிலைமுள்ளிற் பட்டாலும்
முள்ளன் றிலையே பழுதடையும் - கள்ளத்தால்
பெண்ணன்றி யாணே கெடுத்தாலும் ஊர்வாயில்
பெண்ணையே பேசும் பிழை.

கொண்டவனே யேற்றவனாய்க் கொள்வாளோர் கற்பரசி
கண்டவர்மேற் காமமுகங் கொள்ளாளே - பண்டிறைவன்
பாத்து விதித்த பதியிவனே யென்றமைதி
கோர்த்து நிறைவாள் குணம்.

பருவ மடைந்தவளின் பருவப் பசிக்கு
ஒருவன் கரம்பற்ற வைக்க – பருவம்
முதிர்ந்தா லனர்த்தம் முதிருந் தகுதி
எதிர்பார்த் திருத்த லெவன்.

மெல்லியலா ருள்ளமுடல் மென்மைத் தகையவாம்
வல்லியலார் தங்கள் வலிமையினால் – மெல்லியலை
வாட்ட முனையார் வளவாழ் வனுபவத்தை
ஊட்டுந் துணைகொள்வா ரோர்ந்து.

பெற்றவளும் பெண்ணே பிரிய மனைவியென
உற்றவளும் பெண்ணே யுதிரவசம் - பெற்றவளும்
பெண்ணே யதனாற் பிரியமொடு பெண்ணினத்தைக்
கண்ணியமாய்க் காத்தல் கடன்.

அற்ப கரும மதனைப் பெரிதாக்கி
சொற்போர் தொடுப்பர் தொடர்வாரே - சொற்பம்
பொறுமை கடைப்பிடித்தாற் பொன்னனார் நாளை
மறுமைக்கு வித்தாவ ரே.

கொச்சை மொழிவார் குறுக்கே கதைசொல்வார்
எச்சிற் கணக்கி லிதங்கொள்வார் - செச்சே
மயிலார் வழக்க மிவையெல்லா மென்னோ
ஒயிலாகக் கொண்டா ரிவர்.

கற்றா றெனினும்பெண் கல்லா ரவைபுக்கால்
மற்றாரைப் போற்றாமும் மாறிடுவார் – கற்ற
கலையுணர்வின் பெற்றி மறந்திடுவா ரேனோ
நிலையுணர்வு கொள்ளா ரிவர்.

அஞ்சாது மிஞ்சுவா ராண்மைமே லிட்டாலோ
கெஞ்சுவார் கண்கலுழ்வார் வார்ந்தோட – வஞ்சியர்கள்
தம்மை மதிப்பார் தகாத மொழிபகர
இம்மியு மஞ்சா ரிழிவு.

கூடிக் கதைப்பார் குழப்பத்தின் வித்திடுவார்
வேடிக்கை பேசி விமரிசிப்பார் - கோடிதரம்
நல்லவ ராக நடிப்பா ரிவையெல்லாம்
வல்லியர்க் குள்ள வழக்கு.

ஊனைக் குடிப்பை யுடுபுடவை தாமணியும்
பூணைப் புருடர் பொருள்வரவை – வேணுமெனும்
எண்ணமே யன்றி யெழிலார் மடநல்லார்
கண்ணுளவோ வேறு கருத்து.

போரிடத்துத் தோற்றாற் புழுங்கிக்கண் ணீருகுப்பார்
வீரிட்டு வம்பு வசைசொல்வார் - சேரிடத்தும்
தன்குலத்து மேன்மை தருக்கி யுரைத்திடுவார்
பெண்குலத்துக் குள்ள குணம்.

## தொழில்

செய்யுந் தொழில்நோக்கிச் சேயிழையைக் கையளிக்க
வையம் விழையும் வழக்குண்டு - செய்தொழிலொன்
றில்லானை தேடார் இசையார் மணம் பொருத்த
நல்லாளை வாழ்வழியா னென்று.

## பதிவிரதை

பதிவிரதை யென்பாள் பவிசும் பொருளும்
நிதிபலவும் நீள்புகழும் எல்லாம் - விதியால்
மணமகனாய் வந்து வலக்கரத்தைத் தொட்ட
கணவனுக்குப் பின்காண் பவள்.

## இயற்கை

சிற்றினத்தைத் தூசழித்துச் சீரிடத்து வைத்தாலும்
சிற்றினத்தின் பண்பாடு சீராமோ - முற்றிழாய்
மெத்தையிலே அட்டையினை வீற்றிருக்க வைத்தாலும்
செத்தையுளே தானே புகும்.

நீரு முரமும் நிலமுமொன் றேயெனினும்
வேறு மிலையும் விளைபொருளும் - வேறுவேறாய்
உற்பத்தி யாகி யுலகனுப விப்பதொரு
அற்புதமா மென்றே யறி.

வாழு முயிரெல்லாம் வாய்ந்த சுதந்திரத்தை
நாளு மனுபவிக்க வேநாடும் - சூழற்
புடைமேவும் தன்குலத்தைப் போற்சுகிர்த மெல்லாம்
அடையுமோ கூண்டுக் கிளி.

## அழகு

வண்ணத்துப் பூச்சி யழகா லுயிரிழக்கும்
வண்ணத்தாற் பூவுந்தன் வாழ்விழக்கும் - பெண்ணுக்
கழகா லனர்த்தங்கள் ஆயினு மாகும்
அழகின் விளைவை அறி.

## பண்பு

தாங்கொண்ட வன்மத்தைச் சாதிக்க மாட்டாதார்
பூங்கொண்டை நல்லாய் பொருந்திவரும் - தீங்கொன்றைச்
சும்மாவே கற்பித்துச் சூழ்வார் கலவரத்தைத்
தம்மானந் தாங்காமற் றான்.

கூர்செய்யத் தீட்டிய கொம்பையே கத்தியின்
கூர்பார்க்க வெட்டும் குணம்போல - யார்தமக்கு
வேண்டும் பதவிக்கு வித்தா மவரையே
தீண்டித் தகிப்பாரு முண்டு.

ஒறுப்பி லொருகாசு முன்னதமாம் பன்னாள்
உறுத்தும் பசிக்கமுத மாகும் – பருக்கையிலாக்
கஞ்சிக்குந் துப்பில்லான் காணும் சிறுபதமும்
மிஞ்சியதாய்க் காண்பான் கனவு.

சந்தனத்தைப் பூசிக் குளித்தாலும் வெண்பன்றி
சந்தனமுஞ் சேறென்று தாணெண்ணும் - சந்ததமும்
பண்பாடில் லாதான் பதவியினை யேற்றாலும்
பண்பாடு வாரா தவற்கு.

நாணயம் மேலோங்கும் நம்பிக்கை யுண்டாகும்
பூணுந் தொழிலிற் புகழுண்டாம் – வீணர்கள்
சேர்ந்தமைய நாணுவரே சீல மெனத்தக்க
நேர்மைக்கு முண்டோ நிகர்.

தந்தை வளர்ப்பினையும் தாயின் வளர்ப்பினையும்
கண்டு தெளியலாம் கான்முளையில் - முந்தைநாள்
தந்தைக் கடங்கியது தாயை யடக்கியதும்
மைந்தன் நடைமுறையிற் பார்.

ஒறுக்குந் தரமுள்ளான் ஒன்னலார் தீதும்
வெறுக்குந் தகைநண்ணும் தீதும் – பொறுக்கும்
பொறையுள்ளா னோடு புகழும் பொறையும்
நிறைவுள்ளா னுள்ளா னினை.

## பண்பு

நாணயத்தைக் கைவிடுவார் நம்பிக்கை தீர்ந்திடுவார்
பூணுந் தொழிலிற் புறம்போவார் - வீணடருன்
சேர்ந்துறவு செய்வரே சில மெனத்தக்க
நேர்மை கடைப்பிடியா தார்.

குடும்பத் தினரிடையே கொண்ட பிணக்கும்
இடுங்காட்டிற் தோன்று முணர்வும் - கொடியிடையின்
இல்லாள் பிரசவநா ளெய்துநோ விம்மூன்றும்
சொல்லாதே சோர்வு படும்.

மூப்பை மதியார் முறையறிந்து வாய்வழங்கார்
நாப்ப ணொழுக்கங் கடைப்பிடியார் - காப்பறியார்
பெண்ணை யலைக்கழிப்பார் பிள்ளை தயவறியார்
பண்பிலார்க் குள்ள வழக்கு.

## பெருமிதம்

மற்றவர்கள் தன்னை மதித்தொதுங்கத் தாழ்ந்துபிறர்
குற்றேவல் செய்யக் குலம்விளக்க - முற்றும்
தருக்குற்றுத் தன்னைத் தலையாகச் செய்யக்
குறுக்குவழி காண்பாரு முண்டு.

தன்னை மறந்து தருக்குற் றுயர்வெய்த
எண்ணி முயல்வா னியல்பாக - மண்ணறையுள்
உற்றுறைந்து வானில் ஒருநாட் பறந்தழியும்
புற்றீசல் போலக் கெடும்.

## கல்வி

மோட்டாத்து மாக்களாய்ப் போகாது பெண்களுக்
கூட்டு முயர்கல்வி யொவ்வாதோ - ஏட்டிக்குப்
போட்டியாய்ப் பேசுகிறா ளென்றவளை வீட்டிலே
பூட்டிவைப் போமோ புகல்.

கற்பார் மதிநுட்பம் காணும் வகைமூன்று
கற்பூரம் கரிபூங் கதலியுரி - பற்றுமெரி
ஊதாது மூதியும் பற்றுங் கதலியுரி
ஊதியும் பற்றா துணர்.

வாயாடிப் பண்பெல்லாம் வம்பளந்த பெண்விருது
பேயாட்ட மாடு மொருசார்பே - வாயாட்டம்
தீர்க்கு முயர்கல்வி தேவயிலை யென்பவோ
யார்க்கு மொருநீதி தான்.

போற்றினும் போற்றும் பொருந்தாரைத் தாழ்வாகத்
தூற்றினும் தூற்றும் துணிந்தபொருள் - சாற்றியதை
இத்தகைய தென்ன விடைநின்று நோக்காரைப்
பித்தரென் றெண்ணப் படும்.

## உழைப்பு

நேர்சீ ரெனவிரண்டு சொற்பொருளைத் தேர்வினைஞன்
நேர்சீராய் வாழ்வான் நிலத்தினிலே - நேர்சீரே
எவ்வினையுஞ் செய்வினையா யேற்கச் செயுமதனால்
அவ்வினை தேர்க வமைந்து.

வரிசை பெருமையுடன் வாழ்வாங்கு வாழப்
பெரிதும் விரும்ப லியற்கை - வரிசை
அருகி யிருந்தா லமையுமே யஃதால்
தெரிந்தருகி யாம்வழியைத் தேடு.

## வழக்கு

குறையிலா தொன்று குவலயத்தி லில்லை
நிறைகாண்பார் சான்றோ ரெதிலும் - கறைசேர்
குறைமனத்தின் புல்லர் நிறைநோக்கார் குற்றம்
குறைதானே தோன்று மவர்க்கு.

கல்வியோ செல்வமோ காணில் ஒருவர்குறை
மெல்ல மறந்து விடுமன்றே - நலல்லாய்கேள்
வண்ணச் சிறகடித்து வாணிற் பறந்துசெலும்
வண்ணத்துப் பூச்சியே போன்று.

## உதவி

மற்றோர் சிறுதேவை தேடி முடித்தவருக்
குற்ற பெருந்தேவை முடிப்பதற்கு - மற்றொருவர்
தானாக வந்து சார்வார் தமரல்லார்
மேனாள் நலன்தந்த பேறு.

மற்றோர் தயவெவர்க்கும் வேண்டு மிகத்தினிலே
பெற்றா ருடன்பிறந்தார் பிள்ளைகளும் - முற்றியநல்
அன்பின் பிணைப்பா லடைந்தோ ருதவுமுறை
இன்பமொடு காப்பீ ரியைந்து.

## வழக்கம்

கூடிச் சிரித்தார் மகிழ்ந்திருந்தார் நோவினையால்
வாடி யழுங்கா லழுவரோ - கூடி
வசைபலவுங் கூறிச் சிரிப்பா ரதனால்
இசையொருவ வாழா திரு.

தனமிருந் தென்ன தலைமையிருந் தென்ன
நனியேவல் தானிருந்து மென்ன - இனிதே
பழக்க முறைதெரிந்தே வாழு முலக
வழக்கந் தெரியாத போது.

## செல்வம்

செல்வந்த னாய்ச்சகல சம்பத் துடனுறையும்
நல்லோன் வெளியூரா னாயினும் - எல்லாரும்
உள்ளூரா னாக உவந்தேற்றுக் கொள்வார்கள்
கொள்ளும் பொருளுதவி கொண்டு.

நல்ல விளாங்கனியை யானையுண்ட தொப்பாகச்
செல்வமு மோர்காலை சென்றுவிடும் - சொல்லாதே
செங்குரும்பை நீர்வழுக்கல் சேர்வதுபோ லாங்காலம்
பொங்கிவரு மென்றே புகல்.

பொன்னம் பலத்தார் பொருளைத் திரட்டிவைத்துப்
பொன்னம் பலத்தாரா யானாலும் - பொன்னம்
பலத்துட் புகுத லெளிதன்று பொன்னிந்
நிலத்தி லளித்தன்றி யாங்கு.

பேராசை கொண்டு பெருநிலைமை வேண்டுபவர்
நீராசை கண்டு தளர்வுற்றார் - வாராதே
சங்கற்பத் தாலன்றி சௌபாக் கியமெதுவும்
இங்குற்று வாழ்வா ரிலை.

தேடும் ஒருவன் திரவியத்தை மற்றொருவன்
கூடி யனுபவிக்குங் கோட்பாடு - வாடியவன்
வாட்டம் தவிர வளவாழ்வு காண்பிக்கும்
நாட்ட முடையா னது.

சிக்கனமாய் வாழுவது செப்பமே யானாலும்
ஒக்குமெனக் காண்பதிலுஞ் சிக்கனமோ - மிக்கபயன்
காணுமெனக் காண்பதிலுங் கஞ்சத் தனங்காணின்
பூணுவா ரல்லர் புகழ்.

குளிப்பறையுள் மெல்லக்கால் குத்தாதான் பாசி
வழுக்கி விழுவா னதுபோல் - கொழுத்த
பொருளிருந்தான் தன்னை யொடுக்கான் கடனின்
பொருளிறந்து மூழ்கும் புணர்ந்து.

ஊதாரி வாழ்க்கை யுதவாதே யாருக்கும்
சீதேவி விட்டுப் பிரிவாளே - பேதாய்
வரவிற்கு மேற்செலவு செய்வாரைத் தேடி
வருமே வறுமை விரைந்து.

செல்வ மிருப்போர்கள் செல்வி யிலாதிருப்பர்
செல்வ மிலாதோர்க்குச் சீதனமாய்ச் - செல்விபலர்
செல்வ மடைவர் செகங்காணு மற்புதமே
செல்வமொன் றெல்லார்க்கு முண்டு.

## கடன்

இறுக்கும் நினைவுடனே ஏற்குங் கடனை
இறுக்க இறையுதவி நல்கும் – இறுக்காதே
ஏமாற்று மெண்ண வியல்புடையோர் தங்களையும்
ஏமாற்று மென்க விறை.

## கொடை

கொடுப்பார் கொடையைக் குறுக்காக நின்று
தடுப்பார்க்கு மஃது தகுமன்றே – கடுத்துவரும்
ஏற்றிடியின் கார்குலத்தை வேறுதிசை போக்கிவிடும்
காற்றும் பயனடையா வாறு.

## புகழ்

வாழை விரைந்து மரமா யழிந்தொழியும்
போலிப் புகழு மதுபோன்றே – ஆலமரம்
மெல்ல வளர்ந்து விருட்சமாம் பல்லாண்டு
நல்ல புகழ்நிலைக்கும் நாடு.

## பொறுமை

வீம்பு மிகப்பற்றி வில்லங்கஞ் செய்வாரைத்
தாம்பெரிது செய்யா திருப்பினவர் - தாம்வெள்கிக்
கல்லானைப் போலக் கருத்தழித்து தம்மளவில்
சொல்லாதே சோர்ந்து விடும்.

## தன்மதிப்பு

முன்னிலையோ மூப்போ முதிர்ந்த வனுபவமோ
நன்கலையோ வொன்றும் பொருளாக - உன்னை
மதியாதே யேளனஞ்செய் வாரிடத்துச் சென்று
மிதியாதே வாசலவர் மீது.

## உடை

உடையமைதி கொண்டொருவ ருள்ளத்தின் பாங்கும்
நடையமைதி யுங்கணிக்க லாகும் – உடையமைதி
செல்லுமிட மெல்லாஞ் சிறப்போடு சீருதவும்
நல்வரவும் நல்குமென நம்பு.

## ஒற்றுமை

அடம்பங் கொடிபலவும் ஒன்றாய்த் திரண்டால்
திடங்கொள் தாம்பாகுங் காணீர் - அடம்பு
தனித்தாற் பலமற் றறுமாறு மாந்தர்
தனித்தாற் பலமற்றுப் போம்.

## வதந்தி

தந்தி யனுப்பும் தலம்வந் தடையும்வ
தந்தி யெழுப்புவனை வந்தடையும் - நன்கறியாச்
செய்தி பரப்புபவர் சிந்திக்க வேண்டாவோ
எய்தும் விளைவென்னை யென்று.

## சோம்பல்

சுகமுண்டு செல்வ நிறைவுண்டு சோதி
அகமுண்டு நிம்மதியு முண்டு – மகனே
பொழுதோடு நித்திரைக்குப் போய்மீண்டு நாளும்
பொழுதோடு கண்விழிப்ப வர்க்கு.

## உதவி

சேவை முடித்தவர்கள் தேவை முடிப்பவர்கள்
சேவை முடித்ததன்பின் தேவைகளை - சேவையினில்
உள்ளார் முடிப்பார் உடையான் கருணைமிகக்
கொள்வா ரெனக்கொளுதற் குண்டு.

## அரசியல்

தாராளம் வேண்டும் தருக்கொழிய வும்வேண்டும்
நேரார்தம் நட்பும் பெறவேண்டும் - யாரேனும்
தாரா யெனக்கேட்டாற் தந்தே னெனல்வேண்டும்
ஊராளும் வேந்தர்க்குண் டுயர்வு.

## நீதி

வெறுப்பு மிகுந்தா லொருவர்மே லொன்றும்
கறுத்த பிழைநான்காய்க் காணும் - விருப்பினால்
நான்கும் பிழையென்றாய்க் காண்பரே பூதலத்தில்
ஏன்நீதி இவ்வா றுறும்.

## நா

கால்தடு மாறினாற் காயம் படுஞ்சொற்ப
நாள்வச மாறினி லேசுவரும் - நூலளவும்
நாவுதடு மாறினாற் தாழ்வு மொரோவழி
சாவுவந் தாலும் வரும்.

## இல்லறம்

துய்த்திருந்து வாழ்வின் தொடர்பு நிலையாமை
உய்த்தறிந்து பேரின்ப மொன்றுதலே - மெய்ப்பொருளைப்
புல்லறத்தி னாசை பொருந்துதலே யெண்ணுங்கால்
இல்லறத்தி னான்றகுறிக் கோள்.

## நாத்திகம்

நாளெல்லா நாயகனைத் தோற்கடிக்கும் நாத்திகற்கு
வீழுநா ளொன்று விரைந்துவரும் - மாளுநாளே
ஆத்திகரா லேத்திவரும் ஆண்டவனற் னாணையினால்
நாத்திகனைத் தோற்கடிக்கும் நாள்.

## இறை துணை

தருமம் நிலைக்கக் கருதும் ஒருவன்
புரிய முனையும் வினையில் - இறைவன்
நிறையும் அருளைச் சொரியும் உலகில்
அறியும் பலசான் றுள.

## வாழ்க்கை

அரசாணை நீதிபதி யங்கநோய் திர்ப்போன்
பெருகிவரும் நீர்வாய்ப்பு மில்லா - ஒருதலத்தை
வாழிடமாய்க் கொண்டான் வளமா ருயிரதனை
வீழிடமாய்க் கொண்ட வினை.

## புலமை

சொல்லூர் கவிஞர்கள் தொண்ணூ றிருந்தாலும்
வெல்லார் ஒருபுலவர் மேதைமையை - நல்லாய்கேள்
பன்னூறு தாரகைகள் பாவி யொளிர்ந்தாலும்
ஒண்ணாதோர் வெண்மதியை ஒப்பு.

## முயற்சி

ஒருதொழிலு மில்லான் முகடியென் றெள்ளிப்
பெரியோர்கள் பேசநாங் கேட்டோம் - உறுபொழுது
பொன்னுக்கு நேரென்னப் போற்றி யதனாலே
பின்னுக்குக் கண்டார் பொலிவு.

## ஊழியர்

வேலையா ளில்லாத வேளை யனுபவத்தால்
வேலையாள் பாடு விளங்காரோ - வேலையாள்
தன்னடிமை யென்னுந் தருக்குளார் ஊழியரை
அன்புடனே யாதரிப்பா ராய்ந்து.

## தருமம்

தருமம் பொருள்காக்கும் தக்கார்க் குதவார்
பொருள்துன்பந் தந்தழிந்து போகும் - அருமை
அறியார்தங் கைப்பட் டபவாதங் காணின்
உறுவார் பெருந்துயரென் றோது.

## வழமை

சம்பிரதா யங்களெல்லாம் காரணங்கொண் டேயமையும்
சம்பிரதா யத்தேது காணாதோர் - தம்மனத்தில்
வந்தவிதங் கற்பித்து மாற்ற முனைகின்றார்
எந்தவித மென்றுணரி னுண்டு.

## வணக்கம்

காக்கக் கடனென்று கர்த்த னவன்றன்
ஆக்கம் பலவு மளித்திடுவன் - நீக்கமற
எங்கும் நிறைந்தே எழில்செய்யு மன்னவனைக்
கங்குல் பகலுந் தொழு.

| பக்கம் | பாடல் | அடி | பிழை | சரி |
|---|---|---|---|---|
| 1 | 4 | 2 | நுளையும் | நுழையும் |
| 2 | 3 | 3 | நலங்கானச் | நலங்காணச் |
| 5 | 1 | 1 | குயில் கூவ | குயில்கூவக் |
| 7 | தலைப்பு | | மருதகட்சிா | மருதக் காட்சி |
| 7 | 1 | 3 | குளைமேயும் | குழைமேயும் |
| 8 | 4 | 4 | கொளிக்குங் | கொழிக்குங் |
| 10 | 3 | 2 | சுளியோடி | சுழியோடிப் |
| 11 | 1 | 3 | ரசைந்தாடி | ரசைந்தாடிப் |
| 12 | 2 | 4 | நிலலிற் | நிலவிற் |
| 12 | 3 | 2 | குட்டிபுக | குட்புக |
| 13 | 2 | 1 | குஞ்சைச் | குஞ்சைக் |
| 14 | 3 | 3 | லவாசொல் | லவர்சொல் |
| 16 | 1 | 3 | கொண்டு | கொண்டே |
| 16 | 2 | 3 | தாந்தாஞ்செய் | றாந்தாஞ்செய் |
| 18 | 5 | 1 | னத்தனையி | னத்தளையி |
| 19 | 4 | 1 | கொந்துவிட் | கொழுந்துவிட் |
| 20 | 2 | 1 | தென்றாயந்தே | தென்றாய்ந்தே |
| 24 | 1 | 4 | கொன்டிடுவா | கொன்றிடுவா |
| 25 | 2 | 1 | தருகண் | தறுகண் |
| 25 | 2 | 2 | அன்றானை | அன்னானை |
| 27 | 4 | 1 | தெளிய | தேர்ந்து |
| 27 | 5 | 1 | பொழு | பொழுது |
| 28 | 3 | 2 | முண்டு | முண்டே |
| 28 | 4 | 1 | தேவைக்கெனச் | தேவைக் |
| 29 | 2 | 3 | யென்யென்போம் | யென்னென்போம் |
| 35 | 3 | 4 | வவா | லாவா |
| 40 | 4 | 2 | பதவியினாள் | பதவியினால் |
| 41 | 1 | 3 | காணாத | காணாத் |
| 41 | 2 | 2 | ஓட்டி | ஓட்ட |

| பக்கம் | பாடல் | அடி | பிழை | சரி |
|---|---|---|---|---|
| 41 | 2 | 4 | பெறுவாய்க் | வெறுவாய்க் |
| 41 | 4 | 2 | ஓட்டுவா | ஓட்டுவா |
| 41 | 4 | 3 | ஏது | ஏதுமறி |
| 42 | 2 | 2 | கேணி | கோணி |
| 43 | 2 | 1 | புழம்பியழ | புலம்பியழ |
| 44 | 4 | 2 | யனைத்திடுவார் | யணைத்திடுவார் |
| 44 | 5 | 1 | டில்லேதே | டில்லாதே |
| 45 | 4 | 1 | ரான்பீடத் | ராள்பீடத் |
| 45 | 4 | 4 | மவக்கு | மவர்க்கு |
| 46 | 1 | 1 | எடுக்குகாங் | எடுக்குங்காற் |
| 47 | 4 | 4 | செல்லெண்பார் | சென்லென்பார் |
| 54 | 6 | 3 | நுளைந்த | நுழைந்த |
| 55 | 4 | 2 | நெருகக் | நெருக்க |
| 55 | 5 | 3 | வாழ் | வால் |
| 57 | 5 | 1 | மடைந்த்வளின் | தாளின் |
| 62 | 1 | 2 | கரிபூங் | கார்பூங் |
| 62 | 2 | 3 | தேவயிலை | தேவையிலை |
| 62 | 7 | 2 | நலல்லாய்கேள் | நல்லாய்கேள் |
| 62 | 7 | 3 | வாணிற் | வானிற் |
| 66 | 2 | 2 | திடங்கொள் | திடங்கொறும் |
| 67 | 6 | 1 | திரிப்போன் | தீர்ப்போன் |
| 68 | 6 | 1 | னவன்றன | னவன்றனது |



1909 ஆம் ஆண்டு பிறந்த புலவர்மணி அவர்கள் செந்தமிழில் யாப்பமையக் கவிதை இயற்றும் வல்லமை பொருந்திய மிகச் சிலருள் தலைசிறந்தவராவார். அதனாற்றான் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள்

**''வெண்பாவி லென்னைநீ வென்றாய் ஷரிபுத்தீன்**
**நண்பாவென் நாம முனக்களித்தேன்''**

என வாழ்த்தித் தன் நாவாலேயே 'புலவர்மணி' என மகிழ்வுடன் அழைத்ததோடு இலங்கை அரசாங்கத்தினாலும் 'இலக்கிய மாமணி' 'நூறுல் பன்னான்' ஆகிய பட்டங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

அல்-ஹாஜ். எஸ். எச். எம். ஜெமீல்